RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 16 செப்டம்பர் 2022 இதழ்:- 21

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## ஐ.நா.மனித உரிமைகள் பூச்சிய வரைவு தீர்மானம்!
## உள்நாட்டுப் பொறிமுறையை வலுவூட்ட அழைப்பு!
## தமிழர்களின் கோரிக்கைகள் புறக்கணிப்பு!



போர் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு உள்நாட்டு பொறி முறைகளை வலுப்படுத்த அழைப்பு விடுத்துள்ளது இலங்கை தொடர்பான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பூச்சிய வரைவு தீர்மானம். அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றை மீண்டும் வலுப்படுத்துவதன் (3ம் பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும்!
## ஜெனிவாவில் இலங்கை குறித்து இந்தியா கடும் அதிருப்தி!



அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல், மாகாணசபைகளுக்கான அதிகாரப் பகிர்வு மற்றும் மாகாணசபைத் தேர்தல்களை விரைவாக நடாத்துதல் ஆகியவற்றின் ஊடாக இனப்பிரச்சினைக்கு உரியவாறான அரசியல் தீர்வை வழங்குவதில் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எவையும் எட்டப்படாமை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடரில் தீவிர கரிசனையை வெளிப்படுத்திய இந்தியா (3ம் பக்கம் பார்க்க)

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

## திருகோணமலை ஆலய விவகாரத்தில் பின் கதவு ஆக்கிரமிப்பு முயற்சியும் தலைமையற்ற தமிழ் மக்களும்



இது இந்தக் கட்டுரையாளரின் வழக்கமான அரசியல் பத்திகளிலிருந்து சற்று மாறுபட்டது ஆனால் இது அரசியலுக்கு அப்பாற்பட்டதல்ல. சில தினங்களுக்கு முன்னர் (21ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## ஜெனிவா:- இம்முறையும் தமிழருக்குப் பெரும் ஏமாற்றம்?

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் ஈழத் தமிழர்களுக்கு எதனையும் பெற்றுத் தரப் போவதில்லை என்பதை மீண்டும் வெளிப்படுத்தியிருக்கின்றது. திங்கட்கிழமை ஆரம்ப தினத்தன்று இடம் பெற்ற மனித உரிமைகளுக்கான பதில் உயர் ஸ்தானிகர் நடா அல் நஷிப்பின் அறிக்கை சற்று கடுமையானதாகக் காணப்பட்டாலும், (9ம் பக்கம் பார்க்க)

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



18 Years Real Estate Experience

## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com


**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6



• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Lawrence / Morningside



**Scarborough** **$508,000**
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route

### Sheppard & Warden



**Oshawa** **$595,900**
Bedrooms: 2+1 Washrooms: 2
Fully Renovated Suite

### Kennedy /Progress


**Scarborough** **$548,000**
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location

### Hurontario/Hillcrest


**Mississauga** **$599,900**
Bedrooms: 2+1 Washrooms: 1
Renovated Washroom

### 40 New Delhi Dr



**Markham** **$599,999**
2 Floor Commercial Unit With 2
Washrooms & Separate Entrances

### Markham & Eglinton


**Scarborough** **$589,900**
Bedrooms: 2 Washrooms: 2
Steps To All Amenities; Schools

### King St West/John St



**Toronto** **$679,900**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept, 9 Ft Ceilings

### William St N & Elgin St



**Kawartha Lakes** **$799,900**
Bedrooms: 6 Washrooms: 3
Attention Investors!

### Highway 535/Island Rd


**Sudbury** **$899,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
The Waterfront Property

### Church St/Rossland Rd


**Ajax** **$999,949**
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Luxury Townhome

### Conlin Rd & Simcoe St



**Oshawa** **$1,139,000**
Bedrooms: 3+2 Washrooms: 4
Sep/Entrance To A Finished Bsmt

### Pharmacy/Lawrence


**Scarborough** **$1,219,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Separate Entrance To Basement

### Donald Cousens / 16th Ave


**Markham** **$1,499,999**
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### 401 & Mccowan


**Scarborough** **$599,900**
Bedrooms: 2 Washrooms: 2
Minutes To 401, STC, Go Station

### Edenbrookhill / Sandalwood



**Brampton** **$1,800**
Bedrooms: 2 Washrooms: 1
Basement Apartment for Rent

### Midland & Danforth



**Scarborough** **$1,600**
Bedrooms: 2 Washrooms: 1
Basement for rent, Just Renovated

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும்! ஜெனிவாவில் இலங்கை குறித்து இந்தியா கடும் அதிருப்தி!




அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல், மாகாணசபைகளுக்கான அதிகாரப் பகிர்வு மற்றும் மாகாணசபைத் தேர்தல்களை விரைவாக நடாத்துதல் ஆகியவற்றின் ஊடாக இனப்பிரச்சினைக்கு உரியவாறான அரசியல் தீர்வை வழங்குவதில் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எவையும் எட்டப்படாமை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடரில் தீவிர கரிசனையை வெளிப்படுத்திய இந்தியா, மாகாணசபைகளுக்கான அதிகாரப்பகிர்வு உள்ளடங்கலாக அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் மாகாணசபைத் தேர்தல்கள் விரைவாக நடாத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் இன்று திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. இதன் போது இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட்டினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட 17 பக்க எழுத்துமூல அறிக்கையின் சாராம்சம் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்-நஷீஃப்பினால் வாசிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உயர்ஸ்தானிகரின் அறிக்கை மற்றும் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்து சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றினர்.

அதன்படி அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல், மாகாணசபைகளுக்கான அதிகாரப்பகிர்வு மற்றும் மாகாணசபைத் தேர்தல்களை விரைவாக நடாத்துதல் ஆகியவற்றின் ஊடாக இனப்பிரச்சினைக்கு உரியவாறான அரசியல் தீர்வை வழங்குவதில் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டைப் பூர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்களவிற்கு முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படாமை தொடர்பில் இந்தியா சார்பில் உரையாற்றிய பிரதிநிதி கரிசனையை வெளிப்படுத்தினார்.

மேலும் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான நீதி, சமாதானம், சமத்துவம் மற்றும் சுயகௌரவம் ஆகியவற்றை உறுதி செய்யக் கூடியவாறான அரசியல் தீர்வை வழங்குவதே இலங்கையின் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடாக இருந்துவருகிறது என்று குறிப்பிட்ட அவர், தற்போது இலங்கை முகங்கொடுத்திருக்கும் நெருக்கடியானது கடன்களை அடிப்படையாகக்கொண்டு இயங்கும் பொருளாதாரத்தின் மட்டுப்பாடுகள் மற்றும் அதனால் மக்களின் வாழ்க்கைத்தரம் மீது ஏற்படக்கூடிய தாக்கங்கள் என்பவற்றைத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளது என்றும் சுட்டிக் காட்டினார்.

மாகாணசபைகளுக்கான அதிகாரப்பகிர்வு உள்ளடங்கலாக அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படுவதுடன் மாகாண சபைத்தேர்தல்கள் விரைவாக நடாத்தப்படவேண்டுமெனக் குறிப்பிட்ட இந்தியப்பிரதிநிதி, அதன்மூலம் அனைத்து இலங்கையர்களாலும் சுபீட்சமான எதிர்காலத்தை முன்னிறுத்திய தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்றும், எனவே இவ்விடயத்தில் இலங்கை உடனடியானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# ஐ.நா.மனித உரிமைகள் பூச்சிய வரைவு தீர்மானம்! உள்நாட்டுப் பொறிமுறையை வலுவூட்ட அழைப்பு!

# தமிழர்களின் கோரிக்கை புறக்கணிப்பு!

போர் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு உள்நாட்டு பொறிமுறைகளை வலுப்படுத்த அழைப்பு விடுத்துள்ளது இலங்கை தொடர்பான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பூச்சிய வரைவு தீர்மானம். அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றை மீண்டும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

இந்தத் தீர்மானத்தில், தமிழ் மக்கள் போர் முடிவுக்கு வந்த – 2009 ஆம் ஆண்டின் பின்னர் தொடர்ச்சியாக கோரி வலியுறுத்தி வரும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்துவது தொடர்பில் எதுவும் கூறப்படவில்லை. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 'கோர் குறூப்' நாடுகளான பிரித்தானியா, ஜேர்மனி, கனடா, மலாவி, வடக்கு மசிடோனியா, மொண்டினீக்ரோ நாடுகள் இந்த வரைவு தீர்மானத்தை சமர்ப்பித்தன.இதில், நல்லிணக்கம், அனைத்து மக்களும் மனித உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதை உறுதிப்படுத்துதல், அதிகாரப் பகிர்வு தொடர்பான கடப்பாடுகளை இலங்கை நிறைவேற்றவும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வலியுறுத்தும் அதேநேரம், 13ஆவது திருத்தத்துக்கு அமைவாக வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் திறம்பட செயல்படுவதை உறுதி செய்யவும் வேண்டும் என்றும் இந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

மேலும் இலங்கையில் நடைபெற்றவை எனக் கூறப்படும் போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு விரோதமான செயல்கள் குறித்து எதிர்கால விசாரணைக்கு தேவையான ஆதாரங்களை சேகரிக்கவும் – பாதுகாக்கவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு உள்ள திறனை நீடிக்கவும் வலுப்படுத்தவும் தீர்மானம் வலியுறுத்துகிறது. அத்துடன் தீவிர இராணுவ மயமாக்கல், நிர்வாகத்தில் பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் கடுமையானமனித உரிமைகள் மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு தண்டனை விலக்கு உட்பட இலங்கையின் நெருக்கடிக்கு பங்களித்த அடிப்படைக் காரணிகள் மற்றும் மூல காரணிகளை நிவர்த்தி செய்தல் வேண்டும். சிவில் அரசாங்க செயல்பாடுகளை தொடர்ந்து இராணுவ மயமாக்கல், நீதித்துறை மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பான முக்கிய நிறுவனங்களின் சுதந்திரமற்ற போக்கு, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நீண்டகால குறைகள் மற்றும் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதில் முன்னேற்றமின்மை, சிறுபான்மை இனத்தவர்கள் மீதான(22ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



வீடு மற்றும் வாகன காப்புறுதி

# HOME & AUTO INSURANCE

வீடு HOME

வாகனம் AUTO

மோட்டர் சைக்கிள் MOTOR CYCLE

படகு BOAT

கனரக வாகனம் TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்






TR FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!

THUSHANTHAN RAVINDRAN

647-401-2653





ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

### புரட்டாதிச் சனி விரத நாட்கள்

17 செப்டம்பர் 2022 1வது சனி விரத உபயம்:- தியாகராஜா யமுனாராணி குடும்பம்

24 செப்டம்பர் 2வது சனி விரத உபயம்:- அருணாசலம் ஸ்ரீதேவி குடும்பம்

01,08,15 ஒக்டோபர் 2022 சனி விரத நாட்களாகும்.

ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய அங்கத்தவர்களுக்கான வருடாந்த மகாசபைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முக்கிய விடயமாக ஆலய இருப்பிடம் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இவ்வருடத்திற்கான அங்கத்துவப் பணம் செலுத்தாதவர்கள் பணத்தினைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**

# இலங்கை மீது வலுவான தீர்மானம் அவசியம் மனித உரிமைகள் பேரவைக்கு சர்வதேச அமைப்புக்கள் கடிதம்!

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சட்டத்தின்கீழ் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும், மிகமோசமடைந்து வரும் நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்துக் கண்காணிப்பதற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தற்போது கொண்டிருக்கும் ஆணையை மேலும் உறுதிப்படுத்தக் கூடியவாறான மிகவும் வலுவான புதியதொரு தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டுமென சர்வதேச மட்டத்தில் இயங்கும் 4 மனித உரிமைகள் அமைப்புக்கள் பேரவையின் உறுப்புநாடுகளிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளன.

அது மாத்திரமன்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பயன்பாட்டை முடிவிற்குக்கொண்டுவரல் உள்ளடங்கலாக நாட்டில் தற்போது இடம்பெற்று வரும் மீறல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு அப்புதிய தீர்மானத்தின் ஊடாக வலியுறுத்தப்பட வேண்டும் எனவும் அவ்வமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமானதுடன் அன்றைய தினமே இலங்கை தொடர்பான விவாதமும் இடம்பெற்றது. அதனை முன்னிறுத்தி சர்வதேச மன்னிப்புச்சபை, ஆசியப் பேரவை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு ஆகிய 4 அமைப்புக்கள் ஒன்றிணைந்து மனித உரிமைகள் பேரவையின் உறுப்புநாடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கும் கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளன. அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் இடம் பெற்ற கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் பல வருடகாலமாக நீதியைக் கோரிப் போராடி வருகின்ற போதிலும், அந்நாட்டு அரசாங்கங்கள் வழங்கிய வாக்குறுதிகளை மீறியும் பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதில் தடைகளை ஏற்படுத்தியும் போர்க்குற்றங்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ் சாட்டப் பட்டிருப்பவர்களுக்கு உயர்பதவிகளை வழங்கியும் வந்திருக்கின்றது. எனவே பொறுப்புக்கூறல் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பன நிலைநாட்டப்படுவதற்கான அழுத்தத்தை இலங்கை அரசாங்கத்தின்மீது பிரயோகிக்கக் கூடியவாறான தீர்மானமொன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படவேண்டும்.

தண்டனைகளிலிருந்து விலக்கீடு பெறும் போக்கை முடிவிற்குக் கொண்டு வருவதற்கும், இலங்கை மக்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கும் சர்வதேச மட்டத்திலான உடனடி நடவடிக்கைகள் அவசியமாகின்ற பல்வேறு விடயங்கள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை விவகாரத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் சுமார் ஒரு தசாப்தகாலத் தொடர்பானது பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் நம்பிக்கையைத் தோற்றுவிப்பதற்கு ஏதுவானதோர் காரணியாக இருந்திருக்கின்ற பின்னணியில், பேரவையானது இவ்விவகாரத்தில் நிலையான கவனத்தைக் குவிக்கவேண்டியது அவசியமாகும்.

அதன்படி எவ்வித அச்சமுமின்றி கருத்துக்களை வெளியிடுவதற்கும் அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கும் பொதுமக்கள் கொண்டிருக்கும் உரிமைக்கு மதிப்பளித்தல், போராட்டத்தில் கலந்துகொண்டதாக அல்லது போராட்டத்திற்கு ஆதரவளித்ததாக நம்பப்படும் நபர்களைக் கைதுசெய்தல், தன்னிச்சையாகத் தடுத்துவைத்தல் மற்றும் அவர்களின் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்தல் ஆகியவற்றை முடிவிற்குக் கொண்டுவரல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதுடன் அதுவரை அச்சட்டத்தின் பயன்பாட்டை இடைநிறுத்துதல், நீதித்துறை மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படக்கூடிய புதிய தீர்மானத்தில் வலியுறுத்தப்பட வேண்டும் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருக்கோணேஸ்வரத்தை டக்ளஸ் காப்பாற்றுவாரா?

வரலாற்று சிறப்புமிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயப் பகுதியில் ஆலயத்தின் புனிதத்தினை பாதிக்கும் வகையிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதான செய்திகள் தொடர்பாக 13 செப் 2022 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பிரஸ்தாபித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எந்தவொரு மதத்தினரின் உணர்வுகளையும் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகளை அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்தினை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி, குறித்த விடயம் தொடர்பாக ஏற்கனவே பத்திரிகை செய்தி மூலம் அறிந்திருந்தாகவும், அது தொடர்பாக நியாயமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் மதவிவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சரும் இணைந்து திருகோணமலைக்கான களவிஜயத்தினை மேற்கொண்டு நிலமைகளை நேரடியாக ஆராய்வதுடன் ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி, இந்துக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுமாயின் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை காப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் முடியும் என்று ஈழத்து சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்த செய்திக் குறிப்பில், திருக்கோணேச்சரத்தை காப்பதற்குத் தந்தை செல்வா தலைமையில் அமைச்சர் திருச்செல்வம் எடுத்த முயற்சிகள் தோற்றுப் போக அதற்காக அவர் அமைச்சர் பதவியில் இருந்தே விலகினார் 1968இல்.

மன்னர் காலத்துக்குப் பின்பு ஆட்சி அரசியல்வாதியாகத் திருக்கோணேச்சரத்தில் தம் தோல்வியை ஒப்புக் கொண்டு பதவி விலகியவர் மு. திருச்செல்வம். எனக்கு அவரே அரசியல் குரு. நீலன் திருச்செல்வத்தின் தந்தையார்அவர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திருக்கோணேச்சரத்தைக் காப்பதற்கு முயற்சி எடுக்கும் ஆட்சி நிலை அரசியல்வாதி. இடையில் அமைச்சர் நிலையில் உள்ள வேறு எவராவது முயற்சி எடுத்தாரா? என்பதற்கு என்னிடம் சான்று இல்லை.



அமைச்சர் திருச்செல்வத்துக்கு இல்லாத வலிமையும் திறமையும் திருக்கோணச்சரத்தைக் காப்பதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு உள. தேவானந்தாவின் பெரியப்பா கே. சி. நித்யானந்தாவும் நானுமாகத் திருக்கோணேச்சரத்தை எவ்வாறு காக்கலாம் எனப் பலருடன் பேசி இருக்கிறோம். பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். எதிலும் வெற்றி பெற முடியவில்லை.

அமைச்சரின் முயற்சியைப் பாராட்டுகிறேன். முதல் நிலைத் தடைகளைத் தாண்டி உள்ளார். அடுத்த நிலைத் தடைகளையும் தாண்டுவார். இராவணன் வழிபட்ட திருக்கோயில். இராமர் வழிபட்ட திருக்கோயில். இராமாயண கால திருக்கோயில். பூமிப்பந்தில் இன்று வாழ்கின்ற 120 கோடி இந்துக்களுக்கு உரிமைக் கோயில். தமிழகத்தின் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், தமிழகத்து சிவனடியார்கள் என வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம்திருகோணேச்சரம் வந்து வழிபட்டனர். தமது இலச்சினைகளையும் முத்திரைகளை யும் கல்வெட்டாக்கிச் சென்றுள்ளனர். நிரைகழல் அரவம் எனத் தொடங்கும் திருப்பதிகம் சுந்தரர் பாடியது. அவருக்குப் பின் அருணகிரிநாதர் பாடி உள்ளார். ஈழத்து சிவனடியார்கள் அறிஞர்கள் கவிஞர்கள் பலர் (22ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க உதவி நிறுவனத்தின் கவனத்திற்கு!



அமெரிக்க உதவி நிறுவனத்தின் தலைமை நிர்வாகியான சமந்தாபவர், இலங்கைக்கு விஜயம் செய்திருக்கின்றார். பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் இலங்கையின் நிலைமைகளை ஆராயும் நோக்கிலேயே, பவரின் விஜயம் இடம் பெற்றிருக்கின்றது. இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் பேசிய போது இந்திய உதவியை பாராட்டியிருந்த பவர், சீனாவை சாடியிருந்தார். சீனாவின் கடனானது,வலிந்து ஏற்படுத்தப்பட்ட கடன் மேலாதிக்கமென்றும் வர்ணித்திருந்தார்.

சீனாவின் காலூன்றல் தொடர்பில், அமெரிக்க ஆய்வாளர்கள் தொடர்ந்தும் பேசி வருகின்றனர். அண்மையில் அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏயின் தலைவர் கூட, இலங்கையின் பிரச்னையை சீனாவின் தலையீட்டின் விளைவுகளில் ஒன்றென்றே குறிப்பிட்டிருந்தார். இவ்வாறானதொரு பின்னணியில் தான், சமந்தாவின் இலங்கை விஜயம் இடம்பெற்றிருக்கின்றது.

சமந்தா பவர், அமெரிக்காவின் ஜனநாயக கட்சியின் உறுப்பினராவார். பராக் ஒபாமா ஜனாதிபதியாக இருந்த காலத்தில், அவருடன் நெருக்கமாக பணியாற்றிவர்களில் சமந்தா முக்கியமானவர். வெளிவிவகார கொள்கையில் மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வரும் சமந்தா, ஒபாமாவின் காலத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராகவும் இருந்தவர். அமெரிக்காவில் மனித உரிமை விடயத்தில் ஒரு ஜனரஞ்சக நட்சத்திரம் என்று வர்ணிக்கப்படுமளவிற்கு, மனித உரிமை விவகாரங்களில் கடும்தொனி குரலாக தொழிற்பட்டவர்.

இவர் ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராக இருந்த காலத்தில், இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தில் அதிக நாட்டம் கொண்டிருந்தார். இலங்கை தொடர்பான ஒபாமா நிர்வாகத்தின் அணுகுமுறைகளை வடிவமைத்தவர்களில் இவரும் ஒருவர். எனினும் இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற மனிதஉரிமை மீறல் தொடர்பில், கொழும்பை பொறுப்புக் கூறச் செய்யும் அமெரிக்க முயற்சிகள் இது வரையில் வெற்றியளிக்கவில்லை.

ஏனெனில் அமெரிக்கா மென்மையான அணுகுமுறைகளையே கடைப்பிடித்து வருகின்றது. யுத்தம் நிறைவுற்று பன்னிரெண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கூட, பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் எவையும் நிறைவு செய்யப்படவில்லை. எனினும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களோ, இப்போதும் அமெரிக்க தேசிய கொடியை கையிலேந்தியாவாறு தெருக்களில் நின்று கொண்டிருக்கின்றனர்.

இவற்றுக்கு அப்பால், யுத்தத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கின் மீது, மேற்குலகம், குறிப்பாக அமெரிக்கா பிரத்தியேக கவனத்தையும் செலுத்தவில்லை. கடந்த பன்னிரெண்டு வருடங்களில் அமெரிக்க உதவி நிறுவனம் பிரத்தியேக திட்டங்களை வடக்கு கிழக்கில் மேற்கொள்ளவில்லை. திருகோணமலையில் பிராந்திய அலுவலகத்தை கொண்டிருந்த காலத்தில் காண்பித்த ஈடுபாட்டை, யுத்தத்திற்கு பின்னர் காண்பிக்கவில்லை. நோர்வேயின் சமாதான முன்னெடுப்புக்களை பலவீனப்படுத்தியல் அமெரிக்காவின் அன்றைய பயங்கரவாதம் தொடர்பான வெளிவிவகாரக் கொள்கைக்கும் முக்கிய பங்கிருப்பதாக மேற்குலக ஆய்வாளரகளே சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

அமெரிக்கா இதனை திட்டமிட்டு செய்யாத போதிலும், அமெரிக்காவின் கொள்கையை ராஜபக்ஷக்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டனர். சமாதான முன்னெடுப்பில் அனுசரணையாளராக தொழிற்பட்ட நோர்வே, முயற்சிகள் தோல்வியடைந்த பின்னர், பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் பிரத்தியேக கவனத்தை செலுத்தவில்லை. இன்று இலங்கைக்கான தூதரகத்தையே மூடவுள்ளதாக அறிவித்திருக்கின்றது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை கண்டு கொள்ளாமல் மேற்குலகம் நழுவிவிட்டதா? வெறுமனே உதட்டளவில் தான் விடயங்கள் நோக்கப்படுகின்றனவா என்னும் கேள்வியெழுக்கின்றது.

சமந்தா பவர், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பொருளாதார மேம்பாடடிற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் உதவுவது தொடர்பிலும் பிரத்தியேக ஈடுபாட்டை காண்பிக்க வேண்டும். தமிழ்ப் பகுதியில், பிராந்திய அலுவலகம் ஒன்றை நிறுவ வேண்டும். தமிழ் சிவில் சமூக மற்றும் உள்ளூர் அரசு சாரா நிறுவனங்களுக்கு புத்துயிரளிக்க வேண்டும்.

# கைதிகள் விவகாரம், காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் சமந்தா பவரிடம் தெரிவித்தது என்ன?



இரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த சமந்தாபவர், கடந்த 11 செப் 2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தார். இதன் போதே பின்வரும் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுவோர் தொடர்பில் தமிழ் தரப்புடன் பேசினோம். தடுப்புக் காவலில் இருந்த காலம், அவர்கள் அனைவரும் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருப்பது என்பவற்றை கருத்திற்கு கொண்டு, அவர்களை விடுவிக்க முடியுமா என்பதை அறிய பொறிமுறையொன்றைத் தயாரிக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல் மற்றும் சில எம்.பிகளின் கொலைகள் என்பவற்றுடன் தொடர்புபட்டவர்கள் தவிர ஏனையவர்கள் தொடர்பில் இதன் கீழ் கவனம் செலுத்தப்படும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தடுப்புக்காவலில் உள்ள முஸ்லிம்களில் விடுதலை செய்யக் கூடியவர்களை அடையாளம் காணுமாறு புலனாய்வு பிரிவுகளுக்கு அறிவித்துள்ளேன். குண்டுத் தாக்குதல் தொடர்பான அறிக்கைகளை மதிப்பாய்வு செய்து, இந்த முழு விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு இங்கு வருமாறு ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின்னால் மறைகரம் இருந்ததா? அப்படியானால், அந்த மறை கரம் யாருடையது? சிலர் அமெரிக்கா என்கிறார்கள். சிலர் இந்தியா என்கிறார்கள். இன்னும் சிலர் சீனா என்கிறார்கள். மற்றவர்கள் பாகிஸ்தான் என்கிறார்கள். அதனால் மறைகரம் எதுவென்று யாருக்கும் தெரியாது.

அத்தோடு மேலும் விடுவிக்கக் கூடிய காணிகள் குறித்து ஆராயப்படுகிறது. காணாமல் போனோர் விவகாரம் குறித்து தீர்வு காண துரிதப்படுத்தப்படும். புனரமைப்புத் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு துரிதப்படுத்தப்படும். அத்தோடு வடக்கு அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்க இருக்கிறோம். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம், வடக்கு பாரிய பொருளாதார மையமாக மாற்றப்படும். அபிவிருத்திகள் ஊடாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை விட எமக்கு அப்பகுதிகளில் அதிகம் பங்காற்ற முடியும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தையும் கொண்டு வர இருக்கிறோம். தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்தில் உடன்பாடு எட்டப்பட வேண்டும். இது தொடர்பில் கட்சிகள் ஆராய்ந்து வருகின்றன. அவர்களுக்கு ஆறு மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. கட்சிகளிடையே உடன்பாடு ஏற்படா விட்டால் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி, உகந்த தேர்தல் முறை தொடர்பாக மக்களிடம் விருப்பத்தை கோருவேன். அரசியல் கட்சிகளால் இந்தப் பிரச்சினைகளை என்றைக்கும் தள்ளிப் போட முடியாது.

கிராம மட்டத்தில் மக்கள் சபை அமைபபது தொடர்பில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. காலிமுகத்திடல் போராட்டத்திலும் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 14 ஆயிரம் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி மக்கள் சபைகள் ஆரம்பிக்கப்படும்.

மேலும் இலங்கை தொடர்பில் ஜனாதிபதி பைடன் செலுத்து வரும் அக்கறைக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். எமது அழைப்பை ஏற்று வருகை தந்ததற்கு சமந்தாவுக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி அடுத்த வருடமும் இலங்கை வருமாறு அழைப்பை விடுத்தார்.


இதன் போது கருத்து தெரிவித்த அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாகி சமந்தா பவர், இலங்கைக்கு மேலும் 60 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்குவதாகவும் உறுதியளித்தார். ஆனால் தற்போது இலங்கை எதிர்கொள்ளும் சவால்களுக்கு மத்தியில் இது மிக மிக சிறிய மற்றும் சாதாரண உதவியாகும் என்று சமபந்தா பவர் மேலும் சுட்டிக்காட்டினார். எனினும், இந்த உதவிகள் சர்வதேச நிதி நிறுவனங்களின் தனியார் துறைக்கும், இலங்கையில் புதிதாக முதலீடுகளை செய்ய எதிர்பார்த்துள்ள முதலீட்டாளர்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தும் என்றும், புதிய அணுகுமுறைக்குத் தேவையான ஒரு உத்வேகமாக அமெரிக்கா இதன் மூலம் செயற்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

எமது கூட்டிணைக்கும் சக்தியை இதன்மூலம் திறமாக பயன்படுத்த முடியும் என்றும் சமந்தா பவர் மேலும் தெரிவித்தார். இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் அவசர, இடைநிலைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், இலங்கை ஸ்திரநிலைக்குத் திரும்புவதற்கும் ஆதரவளிக்க அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுதந்திர மற்றும் திறந்த இந்து பசிபிக் பிராந்தியத்திற்கான இணைந்த, வளமான, நெகிழ்ச்சியான, பாதுகாப்பான உறுதியான ஆதவை அமெரிக்கா வழங்கும் என்றும் பவர் இதன் போது வலியுறுத்தினார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# வடக்கு கிழக்கில் தொடரும் இராணுவ மயமாக்கல்!

## சர்வதேச பொறிமுறைகளுக்கு உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம்

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை தவறியுள்ள நிலையில், மனித உரிமை மீறல் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சட்டங்களின் கீழ் விசாரணைகளை மேற் கொள்வதற்கும் தண்டனை வழங்குவதற்கும் சர்வதேச சட்டவரம்பின் மூலமான வழிமுறைகளைப் பயன்படுத்தல் மற்றும் நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பவர்களுக்கு எதிராகத் தடைகளை விதித்தல் உள்ளடங்கலாகப் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காக முன்னெடுக்கப்படக்கூடிய முயற்சிகளுக்கு உறுப்புநாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் உரையாற்றிய பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்-நஷீஃப் வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் 12 செப் 2022 திங்கட்கிழமை ஜெனிவா வில் ஆரம்பமானது.



இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட்டின் 17 பக்க எழுத்துமூல அறிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்ட நிலையில் ஐ.நா மனித உரிமைகள் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்-நஷீஃப்பினால் அவ்வறிக்கையின் சாரம்சம் பேரவையில் வாசிக்கப்பட்டது.

அவ்வறிக்கையில் புதிதாகப் பதவியேற்றுக் கொண்ட ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் அரசியலமைப்பு மறுசீரமைப்பு குறித்து பேசியமை வரவேற்கத்தக்க விடயமாகும். இருப்பினும் மிகமோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள முன்னாள் இராணுவ அதிகாரிகள் அரச சிவில் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை மற்றும் முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளமை, பௌத்த தொல்பொருள் சின்னங்கள் தொடர்பில் ஆராய்வதாகக் கூறி மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்புக்கள், கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்டோர், முன்னாள் போராளிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள்

மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தொடர் கண்காணிப்புக்கள் மற்றும் அடக்குமுறைகள், வட, கிழக்கு மாகாணங்களில் அதிகரித்துவரும் இராணுவ மயமாக்கல் என்பன தொடர்ந்தும் தீவிர கரிசனைக்குரிய விடயங்களாகவே இருந்து வருகின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மீள் பிரயோகம் குறித்து சர்வதேச நாடுகள் கடும் அதிருப்தி! இலங்கைக்கு ஆதரவாக சீனா, ரஷ்யா!

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மீள் பிரயோகம், அமைதிப் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்கள் உள்ளடங்கலாக மிக மோசமடைந்து செல்லும் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் தீவிர கரிசனையை வெளிப்படுத்திய உறுப்புநாடுகள், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதி செய்வதிலும் மிகச்சொற்பளவிலான முன்னேற்றமே எட்டப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டின.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் 12 செப் 2022 திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. இதன்போது இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட்டினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட 17 பக்க எழுத்துமூல அறிக்கையின் சாராம்சம் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்-நஷீஃப்பினால் வாசிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உயர்ஸ்தானிகரின் அறிக்கை மற்றும் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்து சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றினர்.

**நெதர்லாந்து:-** அதன்படி பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதில் இலங்கை அடைந்துள்ள தோல்வி மற்றும் சிவில் அரச செயற்பாடுகளில் அதிகரித்துள்ள இராணுவ மயமாக்கல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அரசியலமைப்பு மறுசீரமைப்பின் ஊடாகவோ அல்லது புதிய அரசாங்கத்தின் மூலமோ இன்னுமும் தீர்வு காணப்படாமை குறித்துக் கரிசனையை வெளிப்படுத்திய நெதர்லாந்து நாட்டின் பிரதிநிதி, தற்போது மிகமோசமான பொருளாதார நெருக்கடியின் விளைவாக வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கை மக்களுக்குத் தனது அனுதாபத்தையும் வெளிப்படுத்தினார். அது மாத்திரமன்றி கடந்தகால மனித உரிமை மீறல்கள் மற்றும் முறையற்ற பொருளாதார முகாமைத்துவம் என்பன தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதும் ஊழலை இல்லாதொழிப்பதும் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

**பின்லாந்து:-** அதேவேளை அண்மையில் மாணவ செயற்பாட்டாளர்களைக் கைது செய்வதற்குப் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் தீவிர கரிசனையை வெளிப்படுத்திய பின்லாந்து நாட்டின் பிரதிநிதி, அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவோரைக் கைது செய்வதற்குப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்துவதை உடனடியாக முடிவிற்குக் கொண்டு வருமாறும் வலியுறுத்தினார். மேலும் தற்போது இலங்கை பாரிய நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்திருப்பதை ஏற்பதாகத் தெரிவித்த அவர், இருப்பினும் இந்நெருக்கடிகள் அவசியமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பை வழங்கியிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

**ஐரோப்பிய ஒன்றியம்:-** இலங்கை தற்போது முகங் கொடுத்திருக்கும் சவால்களை ஏற்றுக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உள்ளடங்கலாக மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்படல் மற்றும் நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பாதுகாக்கப்படல் என்பவற்றின் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.

மேலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரயோகம் உடனடியாக முடிவிற்குக் கொண்டு வரப்படுவதுடன் அச்சட்டம் சர்வதேச நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

**சுவிஸ்லாந்து:-** இலங்கை முகங்கொடுத்திருக்கும் மிகமோசமான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியின் விளைவாகப் பெருமளவானோர் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டுக்கும் உணவுப் பாதுகாப்பற்ற நிலைக்கும் முகங் கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் சுவிஸ்லாந்து கரிசனையை வெளிப்படுத்தியது.

அது மாத்திரமன்றி வட, கிழக்கு மக்கள் மிகநீண்டகாலமாக உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை வலியுறுத்திவருகின்ற போதிலும், இவ்விடயத்தில் இன்னமும் மிகச் சொற்பளவிலான முன்னேற்றமே எட்டப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டிய சுவிஸ்லாந்து பிரதிநிதி, அது குறித்தும் அமைதிப் போராட்டக்காரர்கள் 'மீதான தாக்குதல்கள் குறித்தும் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

**பிரான்ஸ்:-** ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்றும், குறிப்பாக நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையை வலுப்படுத்துவதுடன் சிவில் சமூக இடைவெளியை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் பிரான்ஸ் நாட்டின் பிரதிநிதி வலியுறுத்தினார்.

**ஜப்பான்:-** பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் மேற்கொள்வதற்கென முன்மொழியப்பட்ட திருத்தங்களை வரவேற்பதாகத் தெரிவித்த ஜப்பான் பிரதிநிதி, இருப்பினும் நாட்டில் அர்த்தமுள்ள நல்லிணக்கத்தை உறுதி செய்வதற்கு மேலும் பல முக்கிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். அத்தோடு நாட்டின் மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

**ரஷ்யா:-** நல்லிணக்கத்தை உறுதி செய்வதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காண்பித்திருப்பதாகவும், நாடளாவிய ரீதியில் மேற் கொள்ளப்பட்ட போராட்டங்களின் போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதாகவும் பேரவையில் ரஷ்யா சுட்டிக்காட்டியது.

**சீனா:-** மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்துவதிலும் பயங்கரவாத செயற்பாடுகளை எதிர்ப்பதிலும் இலங்கை முன்னேற்றகரமான வகையில் செயற்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டிய சீனப்பிரதிநிதி, இலங்கையின் இறையாண்மை மற்றும் சுயாதீனத்தன்மை ஆகியவற்றைத் தாம் வலுவாக ஆதரிப்பதாகவும் தெரிவித்தார். அது மாத்திரமன்றி ஐ.நாமனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46ஃ1 தீர்மானம் அதற்கேற்றவாறு அமையவில்லை என்றும், இலங்கையின் தற்போதைய நிலைவரத்தை எந்தவொரு தரப்பினரும் தமக்குச் சாதமான முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு முயற்சிக்கக் கூடாது என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

**அமெரிக்கா:-** சட்டத்தின் ஆட்சி, நீதியை நாடுவதில் அனைவருக்கும் சமத்துவமான வாய்ப்பு, முக்கிய கட்டமைப்புக்களின் சுயாதீனத்தன்மை என்பன ஜனநாயகக் கட்டமைப்பின் முக்கிய தூண்களாகும் என்றும், எனவே இலங்கையானது முதலாவது நடவடிக்கையாக நாட்டில் நீண்ட காலமாக நிலவும் ஊழலையும் தண்டனைகளிலிருந்து விலக்கீடு பெறும் போக்கையும் முடிவிற்குக் கொண்டு வர வேண்டும் என்று அமெரிக்காவின் பிரதிநிதி வலியுறுத்தினார்.

**பிரிட்டன்:-** ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46-1 தீர்மானத்திற்கு அமைவாக பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை நிலைநாட்டுவதில் மிகச் சொற்பளவிலான முன்னேற்றங்களே அடையப்பட்டிருப்பதாகக் கரிசனை வெளியிட்ட பிரிட்டன், கடந்த 2020 ஆம் ஆண்டு உறுதியளிக்கப்பட்டவாறு உள்ளக பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்று உருவாக்கப்படாத நிலையில் இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆதாரங்களைத் திரட்டும் நடவடிக்கை தொடர வேண்டும் என்று வலியுறுத்தியது.



**கனடா:-** இலங்கை தற்போது முகங் கொடுத்திருக்கும் நெருக்கடிகள் நாட்டின் மனித உரிமைகள் நிலைவரத்தை மேலும் மோசமடையச்செய்யும் என கனடா அதன் கரிசனையை வெளிப்படுத்தியது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட்டினால் ஏற்கனவே வெளியிடப்பட்ட 17 பக்க எழுத்து மூல அறிக்கையின் சாராம்சம்

# இலங்கையில் மனிதஉரிமைகள் நிலவரம் தொடர்பில் விசேட நிபுணத்துவ பொறிமுறை அவசியமென சர்வதேச மன்னிப்புச்சபை

ஜெனிவாவில் 12ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரின் போது இலங்கையின் தற்போதைய நெருக்கடிக்கு மிகமுக்கிய காரணமாக அமைந்திருக்கக் கூடிய கரிசனைக்குரிய மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கண்காணிப் பதற்கும், அறிக்கையிடுவதற்கும், பரிந் துரைகளை முன் வைப்பதற்கும் விசேட நிபுணத்துவப் பொறிமுறை யொன்று உருவாக்கப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தி யிருக்கின்றது.

இலங்கை பாரிய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் தோற்றம்பெற்றுள்ள மனித உரிமைகள்சார் நெருக்கடிகள், மக்கள் போராட்டங்கள் மீதான அடக்கு முறை கள், பயங்கரவாத் தடைச் சட்டத்தின் முறையற்ற பயன்பாடு, உண்மை, நீதி மற்றும் இழப்பீடு ஆகியவற்றை உறுதிப் படுத்தும் பொறிமுறையில் குறிப்பிடத் தக்களவிலான முன்னேற்றம் எட்டப் படாமை ஆகிய விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டி 09ஆம் திகதி வெள்ளிக் கிழமை விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபை, இவ்வாறானதொரு பின்னணியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் வகிபாகம் எத்தகையதாக அமையவேண்டும் என்றும் அதில் விளக்கமளித்திருக்கின்றது.

அதன்படி '12 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் ஆரம்ப மாகும் போது இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து ஆதாரங்களைத் திரட்டுதல், ஆராய்தல் மற்றும் அவற்றை உரியவாறு பாது காத்தல் ஆகியவற்றுக்கு ஏதுவான வகையில் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டுள்ள பொறு ப்புக்கூறல் பொறிமுறையை மேலும் வலுப்படுத்துமாறும் இலங்கையின் தற்போதைய நெருக்கடிக்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கக் கூடிய மனித உரிமைகள் நிலைவரம் தொடர் பில் கண்காணிப்பதற்கும், அறிக்கை யிடுவதற்கும், பரிந்துரைகளை முன் வைப்பதற்கும் விசேட நிபுணத்துவப் பொறிமுறையொன்றை நிறுவுமாறும் நாம் வலியுறுத்துகின்றோம்' என்று அவ்வறிக்கையில் மன்னிப்புச்சபை தெரிவித்திருக்கின்றது.

அது மாத்திரமன்றி இலங்கையின் தற்போதைய நிலைவரத்தின் தீவிரத் தன்மையைப் புரிந்து கொண்டு, மேற் படி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக் கொள்ளுமாறும் அதற்கமைய இலங்கை யில் மனித உரிமைகள் பாதுகாப்பு மற் றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் உறுப்புநாடுகளிடம் சர்வ தேச மன்னிப்புச்சபை கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இலங்கை அதன் சர்வதேசக் கடப்பாடு களிலிருந்து மேலும் பின்வாங்குவதைத் தடுப்பதற்கு இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் சர்வதேச மட்டத்திலான கண்காணி ப்பையும் அறிக்கையிடலையும் மேற கொள்வது இன்றியமையாததாகும் என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டி யிருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, எனவே அதன் முதற்கட்டமாக இல ங்கை தொடர்பில் வருடாந்தம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கக்கூடிய விசேட நிபுணத்துவப்பொறிமுறையொன்றை நிறுவக்கூடிய தீர்மானமொன்று நிறை வேற்றப்படவேண்டும் என்று வலியுறுத்தி யிருக்கின்றது.

அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
10வது ஆண்டு விழா
முழுமையான விபரங்களுக்கு
12,13ம் பக்கங்களைப் பார்க்கவும்.
விபரங்களுக்கு:- 416 841 9600

கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# ஜெனிவா:- இம்முறையும் தமிழருக்குப் பெரும் ஏமாற்றம்?




கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து ஈழநாட்டிற்காக
– பார்த்தீபன் –

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் ஈழத் தமிழர்களுக்கு எதனையும் பெற்றுத் தரப் போவதில்லை என்பதை மீண்டும் வெளிப்படுத்தியிருக்கின்றது. திங்கட்கிழமை ஆரம்பதினத்தன்று இடம் பெற்ற மனித உரிமைகளுக்கான பதில் உயர் ஸ்தானிகர் நடா அல் நஷிப்பின் அறிக்கை சற்று கடுமையானதாகக் காணப்பட்டாலும், தற்போது வெளியாகியிருக்கும் இலங்கை குறித்த பிரேரணையின் நகல் தமிழ் மக்களுக்கு கடும் ஏமாற்றத்தையே கொடுத்திருக்கின்றது. மனித உரிமைகள் பேரவையின் மூலமாக தமிழ் மக்களுக்கு தீர்வு எதுவும் கிடைத்து விடப் போவதில்லை என்பதை இது மீண்டும் உணர்த்தியிருக்கின்றது.

இந்தப் பிரேரணை இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவை ஏற்கனவே கையாண்டு தோல்வியடைந்த பொறிமுறைகளை மீண்டும் வலுப்படுத்துவதற்கே அழைப்பு விடுத்திருக்கின்றது. கடந்த இரண்டு தீர்மானங்களின் போதும் முன் வைக்கப்பட்ட யோசனைகளை வலுவுட்டுவது தான் தற்போது முன் வைக்கப்பட்டிருக்கும் பிரேரணையின் சாராம்சமாகும்.

அதேவேளையில், இலங்கையை ஐ.சி.சி.க்கு பாரம்படுத்த வேண்டும் என்ற தமிழர் தரப்பின் நீண்டகால ஒட்டு மொத்தக் கோரிக்கையை இது புறக்கணித்திருப்பது தமிழ் மக்களுக்கு கடும் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இதன் மூலம் இந்தப் பிரச்சினையை தொடர்ந்தும் ஜெனிவாவுக்குள் வைத்திருப்பதற்கே சர்வதேச சமூகம் விரும்புகின்றது என்ற செய்தி தான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கடந்த சுமார் ஒரு தசாப்த காலமாக ஜெனிவா மூலமாக ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. அதற்கான ஆக்கபூவமான பலமான பொறிமுறை ஒன்றும் அங்கில்லை. ஜெனிவாவில் நிறைவேற்றப்படும் தீர்மானம் ஒன்றை இலங்கை நிராகரித்தால், அதனை மீறி அதனைச் செயற்படுத்த ஐ.நா.வினால் முடியாது. குறிப்பிட்ட நாட்டின் ஒப்புதல் இல்லாமல் அந்த நாடு குறித்த தீர்மானம் ஒன்றை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மனித உரிமைகள் பேரவைக்கு இல்லை. நல்லாட்சி எனப்படும் மைத்திரி – ரணில் ஆட்சியின் போது பிரேரணைக்கு இணை அனுசரணையை வழங்கி விட்டே அதனை நடைமுறைப்படுத்தத் தவறிய பெருமை இலங்கைக்குள்ளது.

இந்த நிலையில், பிரச்சினையை ஐ.சி.சி.க்குக் கொண்டு செல்வதன் மூலமாக மட்டும் தான் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆனால், சர்வதேச சமூகம் எனப்படும் அமெரிக்கா – பிரித்தானியா – இந்தியா போன்ற நாடுகளைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுத ்தருவது என்பதை விடவும், இலங்கையைத் தமது பிடிக்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது தான் அவர்களுடைய தேவையாகவுள்ளது. இலங்கையை ஓரேயடியாகப் பகைத்துக் கொள்ளவோ, அதற்கு கடுமையான நெருக்கடியைக் கொடுப்பதற்கோ அவை தயாராகவில்லை. ஆக, தீர்மானமும் அதற்கேற்றதாகவே அமையும்!

தமிழ் மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கையாக ஐ.சி.சி. எனப்படும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையைப் பாரப்படுத்த வேண்டும் என்பதே முன் வைக்கப்பட்டு வரும் நிலையில் அந்தக் கோரிக்கை புதிய பிரேரணையில் புறக்கணிக்கப்பட்டிருப்பது தமிழர் தரப்புக்கு கடும் அதிருப்தியையும் ஏற்படுத்தியிருப்பதாக யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மனித உரிமைகள் செயற்பாட்டாளா ஒருவர் தெரிவித்தார். தமிழ்த் தரப்புக்கள் ஜெனிவாவில் களமிட்டிருந்தாலும், இந்த விவகாரத்தை கையாள்வதில் போதிய வேலைத் திட்டங்களைச் செய்திருக்கவில்லை. அதனால் தான், இந்த நிலை தொடர்கின்றது என ஆய்வாளார்ள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

பிரதான நாடுகளுடனான பேச்சுக்களின் போதும் தமிழர் தரப்பினர் இதனையே தமது பிரதான கோரிக்கையாக முன் வைத்திருந்தார்கள். பேரவைக்கு அனுப்பிய கடிதங்களிலும், ஜெனீவாவுக்குள் இந்தப் பிரச்சினையை கையாள்வதில் கடந்த காலங்களில் ஏற்பட்ட தோல்வி காரணமாக இதனை ஐ.சி.சி.க்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற கோரிக்கை பிரதானமாக முன் வைக்கப்பட்டது. இருந்த போதிலும் அதனைப் புறக்கணித்துள்ள பிரதான நாடுகள், ஏற்கனவே தோல்வியடைந்த உள்நாட்டுப் பொறிமுறைகளுக்கு வலுவுட்டப்பட வேண்டும் என்பதற்கான அழைப்பை விடுக்கும் வகையிலேயே தமது பிரேரணை வரைபைத் தயாரித்துள்ளன.

இது ஆரம்ப வரைபாக இருப்பதால் இதற்கான திருத்தங்களை முன் வைக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை உட்பட பல நாடுகள் திருத்தங்களை முன் வைத்தாலும் கூட, இறுதி வரைபு தமிழ்த் தரப்பினருக்கு ஆதரவானதாக வெளிவருமா என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருக்கும் எனவும் தமிழ்த் தரப்பினர் தெரிவிக்கின்றார்கள்.

கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், ரெலோ பேச்சாளர் சுரேந்திரன் குருசுவாமி, வடமாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் உட்பட தாயகத்திலிருந்து பெருமளவிலான அரசியல்வாதிகளும், சிவில் செயற்பாட்டாளர்களும் ஜெனிவாவில் உள்ளார்கள். இதனை விட புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து பெருமளவு செயற்பாட்டாளர்கள் ஜெனிவாவில் முகாமிட்டுள்ளனர்.

வெளிவந்திருக்கும் தீர்மானத்தில் மாற்றங்களைச் செய்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்ற போதிலும், அதற்கான இராஜதந்திரக் காய் நகர்த்தல்களை முன்னெடுப்பதற்கான ஆளுமை தமிழ்த் தரப்பினரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இதனால், இறுதியில் இலங்கை அரசாங்கத்துக்கு மேலும் கால அவகாசத்தைக் கொடுப்பதாகவே இந்தப் பிரேரணை அமையும் வாய்ப்புக்களே அதிகமாகத் தென்படுகின்றது.

ஜெனிவா சென்றுள்ள சுமந்திரன் குறிப்பிட்ட வரைபு தொடர்பாக ஆராய்வதற்காக வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் ஆலோசனைக் கூட்டம் ஒன்றில் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வரைபைத் தயாரித்த பிரித்தானியா தலைமையிலான ஆறு நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்கின்றார்கள்.

பிரித்தானிய மகாராணியின் மறைவு காரணமாக இந்த ஆலோசனைகள் சற்று ஒத்தி வைக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளையில், ஜெனிவாவிலுள்ள ரெலோ பேச்சாளார் சுரேந்திரனும், இந்த வரைபில் மாற்றங்களைச் செய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவித்திருக்கின்றார். தற்போது வெளிவந்திருப்பது நகல் வரைபே தவிர, இறுதி வரைபு அல்ல என சுரேந்திரன் ஜெனிவாவில் தெரிவித்தார்.

இதில் மேலும் பல திருத்தங்கள் செய்யப்படலாம் எனவும் சுட்டிக் காட்டிய அவர் இந்தப் பிரேரணை மனித உரிமைகள் பேரவையில் முன் வைக்கப்படுவதற்கு இன்னும் இரண்டு வாரங்கள் உள்ளன. இதன்போது அங்கத்துவ நாடுகளுடன் பேசி தீ◌ீமானத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை தமிழ்க் கட்சிகள் முன்னெடுக்கும் எனவும் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான புதிய பிரேரணை எதிர்வரும் இருபத்தியெட்டாம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அன்றைய தினம் இது குறித்த விவாதம் ஒன்றும் இடம் பெறவிருக்கின்றது. ஜெனிவாவில் முகாமிட்டுள்ள தமிழத் தரப்பினர் அதில் மாற்றங்களைக் கொண்டு வரக்கூடியதாக இருக்கும் எனக் கூறுகின்றார்கள். ஆனால் இலங்கையைத் தமது பிடிக்குள் வைத்திருக்கும் அதேவேளையில், இலங்கைக்கு அதிகளவுக்கு நெருக்கடியைக் கொடுத்து அதனைத் தனிமைப்படுத்தக்கூடாது என்பது தான் சர்வதேச சமூகத்தின் இராஜதந்திரமாக உள்ளது.

இந்தப் பின்னணியில் தமிழ்த் தரப்பினர் பிரேரணையை மேலும் பலப்படுத்த தமது இராஜதந்திரத் திறமையை வெளிப்படுத்துவார்களா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## கோட்டா இனி எவ்வகையிலும் அமெரிக்கா செல்ல முடியாது இராஜாங்க திணைக்கள முன்னாள் அதிகாரி வெளியிட்ட தகவல்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அமெரிக்காவுக்கு குடியுரிமைக்காக மட்டுமல்ல, சுற்றுலா பயணமாகக் கூட வருகைதர அனுமதிக்கப்பட மாட்டார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முன்னாள் அரசியல் நிபுணர் தயா கமகே தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அமெரிக்க அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றின் மூலம், தமது குடியுரிமையை இரத்துச் செய்து கொண்டார் எனத் தெரிவித்துள்ள தயா கமகே, தற்போது குடியுரிமை வழங்குமாறு கோட்டாபய கோரிக்கை விடுக்கும் நிலையில் அமெரிக்க அரசாங்கம் சில விடயங்களைத் தேடிப் பார்க்கும் எனச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கோட்டாபயவுக்கு எதிராக அமெரிக்காவில் இரண்டு கடுமையான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவர் நாட்டை விட்டு வெளியேற முற்படும் போது, அமெரிக்காவுக்கு வருவதற்கு முயற்சிக்க வேண்டாம் என அவரை எச்சரிக்கும் வகையிலேயே அவரது விசா இரத்துச ்செய்யப்பட்டது எனவும் தயா கமகே குறிப்பிட்டுள்ளார்

அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு சில வரையறைகள் காணப்படுகின்றன. அதற்கமைய செயற்படுபவர்களுடன் அமெரிக்கா இணைந்து செயற்படும் எனத் தெரிவித்துள்ள இராஜாங்கத் திணைக்கள முன்னாள் அதிகாரி, அவ்வாறு பார்க்கும் போது ராஜபக்ச ஆட்சியைவிட ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைத் தான் அமெரிக்கா விரும்புகின்றது எனவும் சுட்டிக் காட்டினார்.

## ஜெனிவா விரைகிறார் சுமந்திரன்!

இலங்கைக்கு எதிராக பிரித்தானியா தலைமையிலான நாடுகளால் கொண்டு வரப்படவுள்ள பிரேரணை தொடர்பில் ஆராய்வதற்காக பிரதான நாடுகளுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை ஜெனிவாவில் நடைபெறவிருக்கின்றது.

இதில் பங்கு கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. ஜெனிவா சென்றடைந்துள்ளார் இதில் கலந்து கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பையடுத்தே சுமந்திரன் ஜெனிவா சென்றதாக சுமந்திரனுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்க ஏற்பாடு செய்துள்ள கூட்டம் ஒன்றும் நேற்று வியாழக்கிழமை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நடைபெறவுள்ளது. இலங்கை மனித உரிமைகள் நிலை, பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கையின் புறக்கணிப்பு போன்ற முக்கியமான விடயங்கள் இதில் ஆராயப்படவிருக்கின்றது. இந் நிலையிலே சுமந்திரன் இப்போது ஜெனிவா விரைந்துள்ளார். இதனை விட புலம் பெயர்ந்த தமிழர் அமைப்புக்கள் பலவற்றின் பிரதிநிதிகளும் ஜெனிவா வந்திருப்பதுடன், பக்க நிகழ்வுகள் பலவற்றிலும் பங்கு பற்றி வருகின்றார்கள்.

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

10 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

10 செப்டம்பர் 2022 முதல் 16 செப்டம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி கோமலாதேவி சிவபாலசுந்தரலிங்கம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கோமலாதேவி சிவபாலசுந்தரலிங்கம் அவர்களது 31ம் நாள் நினைவு நாள் 12 செப்டம்பர் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது உறவுகள் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கோமலாதேவி சிவபாலசுந்தரலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நல்லதம்பி மகாராஜா

யாழ்ப்பாணம் ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி மகாராஜா அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 14 செப்டம்பர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு நல்லதம்பி மகாராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 6ம் மாத நினைவஞ்சலி



### திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி

புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த மகேஸ்வரி என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி அவர்களது 6ம் மாத நினைவு நாள் 15 செப்டம்பர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ராஜீவ் பொன்னம்பலம்

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ராஜீவ் பொன்னம்பலம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 14 செப்டம்பர் 2021 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ராஜீவ் பொன்னம்பலம் அவர்களது ஆத்மா சாந்தியப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பாலசிங்கம் விசுவலிங்கம்

நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பாலசிங்கம் விசுவலிங்கம் அவர்களது 21வது ஆண்டு நினைவு நாள் 14 செப்டம்பர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பாலசிங்கம் விசுவலிங்கம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

**அன்பு இல்லக் குழந்தைகளின்**

**வாழ்வாதாரத்திற்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்**

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்**

**10வது ஆண்டு விழா**

**தமிழக - ஈழத்தமிழக பாடகர்களுடன்**

**இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்**


**23 ஒக்டோபர் 2022 ஞாயிறுக்கிழமை**

**தொடர்புகளுக்கு:- 416 841 9600**

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



10 செப்டம்பர் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி லோகன் இராசையா மாலதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அரணின் 10வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அரண் தனது பெற்றோர்கள்ச கோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



10 செப்டம்பர் 2022 சனிக்கிழமை பிரம்டன் கனடாவில் வசிக்கும் செல்வன் அஜந்தன் ஜோசப் செல்வி அபிஷா ஜோசப் செல்வி அனுஷா ஜோசப் ஆகியோரின் பிறந்த நன்நாளுக்காக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




11 செப்டம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை செல்வன் கீர்த்தன் சதானந்தன் செல்வி மயூரிகா இராஜகுலேந்திரன் ஆகியோரின் திருமண இணைவு நன்நாளாகும். அன்றைய தினத்துக்காக இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




11 செப்டம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை செல்வன் கீர்த்தன் சதானந்தன் செல்வி மயூரிகா இராஜகுலேந்திரன் ஆகியோரின் திருமண இணைவு நன்நாளாகும். அன்றைய தினத்துக்காக இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



12 செப்டம்பர் 2022 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கோமலாதேவி சிவபாலசுந்தரலிங்கம் அவர்களது 31வது நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது உறவுகள் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



13 செப்டம்பர் 2022 செவ்வாய்க்கிழமை ஐயனார் கோவிலடி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி நவரட்ணம் அமிர்தநாயகி இணையர்களது 61வது திருமண நன்நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



14 செப்டம்பர் 2022 புதன்கிழமை ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி மகாராஜா அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



14 செப்டம்பர் 2022 புதன்கிழமை நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பாலசிங்கம் விசுவலிங்கம் அவர்களது 21வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## 29வது பிறந்த நன்நாள் வாழ்த்து



### திருமதி சாரங்கன் நிவேதா

14 செப்டம்பர் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சாரங்கன் நிவேதா அவர்களது 29வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் தனது இல்லத்தில் மிக எளிமையாகத் பிறந்த நன்நாளைக் கொண்டாடிய திருமதி சாரங்கள் நிவேதா அவர்கள் அன்றையதினம் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை 29 காணும் திருமதி சாரங்கன் நிவேதா அவர்கள் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தும் அவரது உறவுகளுடன் செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்க வளர்கவென வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!




14 செப்டம்பர் 2022 புதன்கிழமை உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு ராஜீவ் பொன்னம்பலம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



14 செப்டம்பர் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் அகத்தியன் சாந்தகுமார் அவர்கள் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றமைக்காக தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



14 செப்டம்பர் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சாரங்கன் நிவேதா அவர்களது 29வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சாரங்கன் நிவேதா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



15 செப்டம்பர் 2022 வியாழக்கிழமை புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த மகேஸ்வரி என்று அன்பாக அழைக்கப்படும் திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி அவர்களது 6ம் மாத நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% முதல் 2% வட்டி
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
S. Christeen
416-258-6759

Kamal Navaratnam
Sales Representative
Direct: 416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RE MAX Community Realty Inc.
Brokerage
1265 Morningside Ave., Suite 203
Toronto, ON M1B 3V9
Office: 416-287-2222
Fax: 416-2824488
Independently Owned and Operated
KAMAL NAVARATNAM REAL ESTATE
Trusted and reliable services

UTHAYAS SUPER MARKET
5010 Steeles Ave W, Etobicoke, ON M9V 5C6
416-740-7971

N.K.S
DRAPERY & BLINDS FABRIC
•Custom Made Vertical Blinds •Venetian Blinds •Draperies •Curtain •Shutters •Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX


முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்

திருமதி நவநாதன் துஷி

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரி

# இன்னிசை மாலையும் இரா

அரவிந்தனின்



இசையில்

சுப்பர் சிங்கர் புகழ் புண்யா,

ஹரிகரசுதன்

மற்றும் கனேடிய தமிழ்ப் பாடகர்கள்

இணைந்து வழங்கும்

ஹரி

இன்

OCTOBER 23 2022 SUN @ 6:00PM

METROPOLITAN CENTRE

3840 FINCH AVE EAST, SCARBOR

(FINCH & KENNEDY)


MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
Business Loan
Business (Visa MC)
Best Rate Mortgage in Town,
Bad Credit New Immigrants
bankruptcy, 0% Down Payment.
1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP
Real Estate, Credit Counseling
Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife


தொடர்பு

ஈழநாடு பரமேஸ்

தயவு செய்து நுழைவுச்சீட்டு

நிகழ்வுகள் சரியாக மாலை 6

தங்கள் ஆதரவ


புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கான
இன்னிசைமாலையும் இராப்போசன விருந்தும்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
லோகன் இராசையா
416 991 1292
Can West Transport

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough
Mississauga Branch

Tekon
Banquet services & Catering
Neela Nadarajan
Event planner
Wedding Reception Engagements
Birthday Parties Puberty Ceremony
Bharathanatya Arangetram Any other Occasions
416.844.3018
416.995.2059

JESEETHA JEGANATHAN
Broker
Cell: 416 566 0337
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
www.jeseehomes.com
Century 21
People's Choice Realty Inc. Brokerage
BUYING & SELLING MADE EASY WITH THE JJ TEAM!
JAY JEGANATHAN, BA
Sales Representative
Direct: (647) 963-2677
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
JEYSURESH JEGANATHAN
Sales Representative
Direct: (416) 616-4046
Bus: 416 742 8000
Fax: 416 742 8001
வீடு வாங்க விற்க, அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கு...

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர், டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில்
கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles, Yellow Building, 6055 Unit C-102
Scarborough, ON M1X 0A7 - Canada. 647 702 2159





வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
யந்தி நினைவரங்கத்தில்
ரிகை 10வது ஆண்டாக நடாத்தும்
ப்போசன விருந்தும் 2022
சுப்பர் சிங்கர் புகழ்
புண்யா







ரைப்பட பாடகர்
ரிஹரசுதன்
னிசை மாலை
அன்பளிப்பு:
ROUGH VVIP: $200, VIP: $100
https://eelanadu.ca/dinner-and-music/
களுக்கு:
- 416.841.9600
டன் மண்டபத்திற்கு வரவும்.
:00 மணிக்கு ஆரம்பமாகும்.
யுக்கு நன்றிகள்

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd.
Scarborough, ON
416.757.9111
994 Albion Rd
Etobicoke, ON
647.352.2229

புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்கான
இன்னிசைமாலையும் இராப்போசன விருந்தும்
சிறப்புற வாழ்த்துகின்றோம்
ஈசன் கிருஷ்ணா
905-886-7399
SunLife Insurance

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Sincerity-Reliability-Quick Approval for all Clients at Competitive rates.
Tel: 416-716-5946
Fax: 416-291-3309/905-427-4112
Licence # 10530
Roshan Wignarajah EET, AMP
Mortgage Broker
305-5200 Finch Ave. E, Scarborough, ON M1S 4Z5
Email: rwignarajah@mortgagealliance.com
www.mortgagealliance.com/RoshanWignarajah
200, 2005 Sheppard Ave E, Toronto, ON M2J 5B4

VASANTHAM SUPERMARKET
SRI LANKAN, INDIAN & MULTINATIONAL GROCERIES
மனங்களையும் மனைகளையும் வசந்தமாக்கும்
வசந்தம் சுப்பர்மார்கெட்
இலங்கை, இந்தியா மற்றும் பன்னாட்டு மளிகை பொருட்கள்
2900 Markham Road, Scarborough,
ON M1X 0C8
416 292 8585

WEXFORD WELLNESS CARE INC
MASSAGE THERAPY
PHYSIOTHERAPY
ORTHOPAEDIC
ACUPUNCTURE
CHIROPRACTIC
ORTHOTICS
301-240 Alton Towers Circle, Toronto ON M1V 3Z3
647-349-5120
647-349-5121
wexfordclinic@gmail.com

KANAGAAMBIKAI GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Pawning
Gold Items
3160 EGLINTON AVE.E., UNIT #3,
SCARBOROUGH, ON M1J 2H4
Tel:416-269-7197

Proudly Canadian Since 1983
Jyothi அன்றும் இன்றும் என்றும்..
Experience the Taste
ஜோதி தயாரிப்புக்களை கேட்டு வாங்குங்கள்
416.477.5345
www.jyothifoods.com

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca


### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth

Friends MATRIMONY

உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...

10,000க்கு மேற்பட்ட வரன்கள் கையிருப்பில்!

10,000+



இலங்கைத் தமிழர்களுக்கான உலகளாவிய திருமண இணையத்தளம்.

மணமகள் தேவை
கனடாவில் வசிக்கின்ற 29 வயது வேளாளர், Bachelors degree, Trading associate மணமகளுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

மணமகள் தேவை
கனடாவில் வசிக்கின்ற 33 வயது வேளாளர், Diplpma, own business மணமகளுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

மணமகள் தேவை
கனடாவில் வசிக்கின்ற 30 வயது வேளாளர், Bachelors degree, Medical Administration மணமகளுக்கு பொருத்தமான வரனை எதிர் பார்க்கின்றோம்.

- 416 477 6854
  416 477 2259
  647 709 1536
- GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
- friendsmatrimonym@gmail.com

Mon to Fri 10AM to 7PM
Sat 1PM to 7PM

www.friendsmatrimony.com

# ஜெனிவா:- இவ்வாண்டுப் பலன் என்ன?



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

ஐ.நா மனித உரிமைகள் பேரவை எனப்படுவது ஒரு நாட்டுக்கு எதிராகத் தீர்மானத்தை நிறைவேற்றலாம். ஆனால் அதை நடைமுறைப்படுத்தும் ஆணை அந்தப் பேரவையிடம் கிடையாது. அதை நடைமுறைப்படுத்தும் உபகரணம் எதுவும் அந்தப் பேரவையிடம் கிடையாது. ஒரு நாட்டுக்கு எதிராக பொருளாதார தடைகளை விதிப்பதற்கோ. பயன் பொருத்தமான அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கோ பேரவையால் முடியாது.

மாறாக குறிப்பிட்ட ஒரு நாடு பேரவையோடு இணங்கிச் சென்றால் அந்த நாட்டுடன் இணைந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அந்த நாட்டின் இணையனுசரணையோடு ஐநா அலுவலர்கள் தொழிற்பட முடியும். அதன் மூலம் ஒரு தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியும். அது தான் 2015 ஆட்சி மாற்றத்தின் பின் நடந்தது. ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ஐநா தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியது.

ராஜபக்சக்கள் ஆட்சியில் இருந்த வரை. ஐநா தீர்மானங்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவே நிறைவேற்றப்பட்டன. அவை ஒருவிதத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான மேற்கத்திய வியூகங்களின் பகுதியாகக் காணப்பட்டன.அவை தமிழ்மக்களுக்கு ஆதரவானவை என்ற வெளித் தோற்றத்தை கொண்டிருந்தாலும் அவற்றுக்குப் பின்னால் இருந்த இராஜதந்திர இலக்கு என்னவென்றால். சீனாவை நோக்கிச் சாயும் இலங்கை அரசாங்கத்தை கட்டுப்படுத்துவது தான்.

இந்த அடிப்படையில் ராஜபக்சக்களின் காலத்தில் ஐநா தீர்மானங்கள் அரசாங்கத்திற்கு எதிரானவை. ஆனால் ரணிலுடைய காலத்தில் 2015ல் ஐநாவுடன் அவர் இணக்கத்துக்கு வந்தார். அவ்வாறு இணை அனுசரணை வழங்கி உருவாக்கப்பட்டது தான் நிலைமாறு கால நீதிக்கான 30-1 தீர்மானம்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க இணை அனுசரணை வழங்கி உருவாக்கிய தீர்மானத்தின் பிரகாரம் கட்டமைப்புசார் மாற்றங்களை செய்யவில்லை. நிலைமாறு கால நீதி இலங்கைத்தீவில் ஓரழகிய பொய்யாக மாறியது. நாங்கள் ஒரு பரிசோதனை செய்தோம் அதில் தோற்று விட்டோம் என்று சுமந்திரன் வவுனியாவில் வைத்து தெரிவித்தார். ஏனெனில் கூட்டமைப்பு நிலைமாறுகால நீதியின் பங்காளியாகக் காணப்பட்டது.

இது 2015 ஆட்சி மாற்றத்தின் பின் நிகழ்ந்தது. அதன்பின் ராஜபக்சக்கள் மறுபடியும் வந்தார்கள். அவர்களுடைய காலத்தில் அரசாங்கத்திற்கு எதிராக ஐநா தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கடந்த ஆண்டு 46-1 தீர்மானத்தின் மூலம் சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான ஒரு கட்டமைப்பு- அலுவலகம்- பரிந்துரைக்கப்பட்டது.

இப்பொழுது ரணில் வந்து விட்டார். தர்க்கத்தின்படி பார்த்தால் இந்தமுறை வரக்கூடிய தீர்மானம் ரணில் விக்ரமசிங்கவின் இணையனுசரணையோடு நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கான வாய்ப்புகள் உண்டா?

ஏனெனில் 2015இல் ரணில் ராஜபக்சக்களிற்கு எதிரான ஆட்சி மாற்றத்தின் கருவி ஆனால் இப்பொழுது அவர் ராஜபக்சக்களின் முன்தடுப்பு. அவருடைய வெளிவிவகார அமைச்சர் யார் என்றால் ராஜபக்சக்களின் தனிப்பட்ட வழக்கறிஞரான அலி சப்ரி. கடந்த திங்கட்கிழமை அலி சப்ரி பின்வருமாறு தொனிப்பட தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் குற்றச்சாட்டுக்களின் உண்மையை கண்டறிவதற்காக உள்ளக பொறிமுறை ஒன்று எதிர்வரும் காலங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடன் பேச்சுவார்த்தைமூலம் இணக்கமொன்றை ஏற்படுத்திக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் 2015ஆம் ஆண்டைப் போல இம்முறை அரசாங்கத்தின் இணை அனுசரணையோடு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படக்கூடிய வாய்ப்புகள் மிகக் குறைவாகத் தெரிகின்றன. அதற்காக. கடந்த வாரம் வெளிவந்த ஐநா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை அரசாங்கத்தை விமர்சித்திருப்பதை வைத்து புதிய ஜெனிவாத் தீர்மானத்தைக் குறித்து தமிழ்மக்கள் அதிகம் எதிர்பார்க்கலாமா? இந்த இடத்தில் தமிழர்கள் உற்றுக் கவனிக்க வேண்டிய ஜெனிவா யதார்த்தம் ஒன்று உண்டு. என்னவெனில். கடந்த 13 ஆண்டுகளாக ஐநா மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைக்கும் ஜெனிவா தீர்மானத்திற்கும் இடையே காணப்படும் இடைவெளி தான். அது தமிழ்மக்களுக்கு விரக்தியூட்டக்கூடிய ஏமாற்றகரமான ஒரு இடைவெளி. அது தான் தமிழ்மக்கள் அதிகம் உழைக்க வேண்டிய ஒரு இடைவெளியும்.



கடந்த பல ஆண்டுகளாக ஐநா மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கைகள் அரசாங்கத்தை விமர்சித்து வருகின்றன. ஆனால் தீர்மானங்கள் அவ்வாறு இல்லை. அதை இன்னும் சரியாகச் சொன்னால். தீர்மானத்தை பெரும்பான்மை வாக்குகளோடு நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக பெரும்பாலான நாடுகளை திருப்திப்படுத்தும் விதத்தில் தீர்மானம் நீர்த்துப் போகச் செய்யப்படும் என்பதே ஜெனீவா யதார்த்தம் ஆகும்.

அதாவது ஐநா மனிதஉரிமைகள் ஆணையரின் அறிக்கையில் காணப்படும் அரசாங்கத்துக்கு அச்சுறுத்தலான விமர்சனப் போக்கு ஐநா தீர்மானங்களில் இருப்பதில்லை.இம்முறை தீர்மானத்திலும் அப்படித்தான் அமையும்.

அதேசமயம். முன்னைய தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட சாட்சிகளையும் சான்றுகளையும் திரட்டுவதற்கான அலுவலகத்தை ஒரு உள்நாட்டுப் பொறிமுறை மூலம் பதிலீடு செய்ய முடியாது.

ஏனென்றால் அந்த அலுவலகம் ஏற்கனவே இயங்கத் தொடங்கி விட்டது. அது ஒரு பலமான அலுவலகம் அல்ல. கடந்த ஆண்டு ஜனவரி மாதம் மூன்று தமிழ்த் தேசிய கட்சிகளும் ஜெனிவாவுக்கு கூட்டாக எழுதிய கடிதத்தில் கேட்டிருந்த பொறிமுறைக்கு நிகரான ஒரு கட்டமைப்பு அல்ல.

அது மனிதஉரிமைகள் பேரவைக்கு கீழ் தான் இயங்கும். கடந்த 13 ஆண்டுகளாக மனிதஉரிமைகள் பேரவை தமிழ்மக்களுக்கு எப்படிப்பட்ட நீதியை பெற்றுத் தந்தது என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால் அப்பலவீனமான அலுவலகத்தைக் கூட சீனா போன்ற நாடுகள் மேலும் பலமிழக்கச் செய்ததாக புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. அவ்வலுவலகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை சீனா தலையிட்டு குறைத்து விட்டதாக மேற்படி அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. அவ்வலுவகத்துக்கு முதலில் பிரித்தானியாவும் நோர்வேயும் நிதியுதவி வழங்குவதாக கூறப்பட்டது. ஆனால் அவ்வாறு விசேஷ நிதியை ஒதுக்காமல். ஐநாவின் பொது நிதி ஒதுக்கீட்டுக்கூடாக அந்த அலுவலகத்தை இயக்க வேண்டும் என்று சீனா போன்ற நாடுகள் வலியுறுத்தியதாக தெரிய வருகிறது.

இது கடந்த ஆண்டு நடந்தது. ஐநா மனிதஉரிமைகள் பேரவைக்கு ஏற்கனவே நிதிப்பற்றாக்குறை உண்டு. அப்பற்றாக் குறை அவ்வலுவகத்திலும் பிரதிபலித்தது. கடந்த ஆண்டு ஐநா மனிதஉரிமைகள் ஆணையாளர் தன்னுடைய அறிக்கையில் இந் நிதிப்ப ற்றாக்குறை தொடர்பாக சுட்டிப்பாகக் கூறியுள்ளார். நிதி போதாமையால் தான் அவ்வலுவலகம் முழுவேகத்தோடும் முழுப் பலத்தோடும் இயங்க முடியவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகிறது. நிதி போதாமையால் அதன் ஆளணி 13இல் இருந்து 8ஆகக் குறைக்கப்பட்டது. எனினும் அவ்வலுவலகம் இப்பொழுது இயங்குகின்றது. அது சாட்சியங்களையும் சான்றுகளையும் சேகரித்து வருகிறது. அவ்வலுவகத்தை பலவீனப்படுத்தும் நோக்கத்தோடு அல்லது அவ்வலுவகத்துக்குரிய காரணங்களை வழுவிழக்கச் செய்யும் நோக்கத்தோடு அலி சப்ரி உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றைக் குறித்து பேசுகிறார்.

ஆனால் உள்நாட்டுப் பொறிமுறை. உள்நாட்டுச் சட்டங்கள். உள்நாட்டின் யாப்பு என்பவை தமிழ் மக்களுக்கு நீதியை வழங்க முடியாதவை என்ற கருதுகோளின் அடிப்படையில் தான் நிலைமாறுகால நீதி என்பது 2015ஆம் ஆண்டு பரிந்துரைக்கப்பட்டது. உள்நாட்டு நீதி போதுமானதாக இருந்தால் ஏன் நிலை மாறுகால நீதி என்ற ஐநா ஏற்பாட்டை குறித்து சிந்தித்திருக்க வேண்டும்?

மேலும். ஈஸ்ரர் குண்டு வெடிப்புக்கு நீதி கேட்டு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஏன் ஐநாவிடம் முறையிட வேண்டும்? உள்நாட்டு நீதிக் கட்டமைப்பை அவர் நம்பவில்லை என்பதைத் தானே அது காட்டுகிறது? எனவே உள்நாட்டின் நீதியின் போதாமை காரணமாகத்தான் ஐநாவின் 30-1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.அதன் அடுத்த கட்டமாக 46-1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் எல்லாவற்றுக்குப் பிறகும் இலங்கை அரசாங்கம் இப்பொழுதும் உள்நாட்டுப் பொறிமுறை குறித்து கனவு காண்கிறது என்றால் அந்த கனவுக்கான துணிச்சல் எங்கிருந்து வருகிறது? ரணில் விக்கிரமசிங்கவை மேற்கு நாடுகள் கைவிடாது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலா? அந்த நம்பிக்கை காலப் பொருத்தமுடையது அல்ல என்பதனை மேற்கு நாடுகள் நிரூபித்தால் தான் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கலாம்.

ஜெனிவாவில் இலங்கையை மையப்படுத்தி கடந்த சில ஆண்டுகளாக சீனா ஒருவித நிழற்போர் நிலைமையை தோற்றுவித்திருக்கிறது. அரசாங்கத்துக்கு எதிராக தீர்மானத்தைக் கொண்டுவரும் நாடுகள் ஒருபுறம். சீனாவும் உட்பட அரசாங்கத்துக்கு ஆதரவான நாடுகள் இன்னொருபுறம். இதில் சீனா கடந்த ஆண்டு தெளிவாக வெளிப்படையாக தான் அரசாங்கத்தின் பக்கம் என்பதை அறிவித்து விட்டது. இந்த முறையும் கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் ருவிற் பண்ணிய செய்தியின்படி சீனா அரசாங்கத்தோடு தான் நிற்கும்.

ஏற்கனவே சான்றுகளையும் சாட்சிகளையும் திரட்டுவதற்கான அவ்வலுவகத்துக்குரிய நிதியை தந்திரமாக குறைத்தது சீனா போன்ற நாடுகள் தான் என்ற ஒரு குற்றச்சாட்டு உண்டு. இப்பொழுது சீனா வெளிப்படையாகவே இலங்கை அரசாங்கத்தின் பக்கம் நிற்கின்றது. இப்படிப்பட்ட ஒரு ஜெனிவாக் களத்தில் இந்தியா என்ன நிலைப்பாட்டை எடுக்கும்?

கடந்த ஆண்டு இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.ஒரு நாட்டுக்கு எதிராகத் தீர்மானம் வரும்பொழுது வாக்கெடுப்பைத் தவிர்ப்பது என்பது நடுநிலையானது போலத் தோன்றலாம். ஆனால் ஜெனீவாவில் அரசாங்கத்துக்கு ஆதரவான நாடுகள் குறைவாக இருக்கும் ஒரு பின்னணியில் வாக்களிக்காமல் விடுவது என்பது அரசாங்கத்தை பாதுகாக்காமல் விடுவதுதான்.

ஆனால் தமிழ்மக்கள் அதைவிட வெளிப்படையாக இந்தியா தங்கள் பக்கம் நிற்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். கடந்த 9 மாதங்களாக இலங்கைக்கு அதிகம் உதவிய நாடு இந்தியா. அந்த உதவியை ரணில் விக்கிரமசிங்க உயிர் மூச்சு என்று வர்ணித்தார்.

சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்கு உயிர் மூச்சை வழங்கிய இந்தியா தமிழ் மக்களின் விடயத்தில் தெளிவான. வெளிப்படையான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதே தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாகும்.

கிழக்கில் சீனா ஆழமாக தன் கால்களை பதித்து வருகிறது. வடக்கிலும் சீனா அவ்வாறான முன்னேற்பாடுகளில் இறங்கியிருக்கிறது. இவ்வாறான ஒரு பின்னணியில் ஜெனீவாவில் சீனா அரசாங்கத்தின் பக்கம் நிற்கும் பொழுது. இந்தியா யாருடைய பக்கம் நிற்கிறது என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை முக்கியமானது.

ஏனெனில் கடந்த 13 ஆண்டுகளாக எந்த நாடு தங்கள் பக்கம் நிற்கிறது அல்லது நிற்கவில்லை என்பதனை தமிழ்மக்கள் நிறுத்துப் பார்க்கும் ஒரே அனைத்துலக அரங்காக ஜெனிவா தான் காணப்படுகிறது.

## கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
## CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8, Tel: 416-321-6104

"ஐயனை நாடுங்கள்! அவன் புகழ் பாடுங்கள்!
என்றும் புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்"

### புரட்டாதி சனிவார வழிபாடும், தோஷ நிவர்த்தி மஹா யாகமும்
### சனி வாரங்கள்: 17.09.2022, 24.09.2022, 01.10.2022, 08.10.2022, 15.10.2022

மெய்யடியார்களே!

கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் தனி சன்னிதானமாக எழுந்தருளி அருள் பாலித்து வரும் ஸ்ரீ ஐயப்ப பெருமானுக்கு கட்டுப்பட்டு திருவருள் புரியும் ஸ்ரீ சனீஸ்வர பெருமானுக்கு அபிஷேகம், எள் எண்ணெய் தீபமேற்றுதல், அர்ச்சனை, தண்ணீர்க் குட அபிஷேகம் போன்ற பரிகார வழிபாடுகள் நடைபெறவுள்ளன. ஆயுள், வாகனம், தொழில், ஆரோக்கியம் போன்ற நற்பலன் வேண்டி அடியார்கள் தவறாது புரட்டாதி மாதச் சனி வாரங்கள். தோஷபரிகார வழிபாடுகளில் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். (ஆலயம் காலை 7:00 மணிமுதல் இரவு 9:15 மணிவரை திறந்திருக்கும்)

### சனீஸ்வர தோஷ நிவர்த்தி மஹாயாகம்

மாத ஐந்து வாரங்களும் தோஷ பரிகாரங்களில் உயர்வான பலன் தரக்கூடிய மஹாயாகம் நடைபெற உள்ளது. ஏழரைச்சனி, அஷ்டமச்சனி, சனிதிசை, சனிபுத்தி ஜாதகத்தில் சனிதோஷம் போன்ற பாதிப்புள்ளவர்கள் நற்பலன் வேண்டி மஹாயாகத்தில் உங்கள் கைகளினால் பூர்ணாகுதியிட்டு தோஷ நிவர்த்தி பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

(யாகம் காலை 9:00 மணி முதல் பகல் 12:30 மணிவரை நடைபெறும்)

### நவராத்திரி விரதாரம்பம்
### காலம்: 26.09.2022 திங்கட்கிழமை - 04.10.2022 செவ்வாய்க்கிழமை


கல்வி, செல்வம், வீரம் வேண்டி வழிபடும் நவராத்திரி விரதத்தில் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவிகளையும், கொலு மண்டபத்தில் கும்பம் வைக்கப்பட்டு, படிகளில் அழகிய கொலு பொம்மைகள் வைக்கப்பட்டு, சிறப்பு அபிஷேகப் பூஜை, கலை நிகழ்ச்சிகள், குங்கும அர்ச்சனை, ஸ்ரீசக்கர நவாபரண பூஜை ஹோமம் பலிசுஹாசினிபூஜை போன்றன சிறப்பாக நடைபெற்று 10ஆம் நாள் விஜய தசமியன்று பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வும், மாலை மானம்பூ உற்சவமும் (வாழை வெட்டு) நடைபெறும்.

மாலை 6:00 மணிக்கு அபிஷேகப் பூஜை
மாலை 7:00 மணிக்கு ஸ்ரீ சக்கர நவாபரண பூஜை, ஹோமம் பலி
மாலை 8:00 மணிக்கு கலை நிகழ்ச்சிகள், வசந்த மண்டப பூஜை
இரவு 9:00 மணிக்கு பிரசாதம் வழங்குதல்

**இறைபணியிலுள்ள அறங்காவல் சபையினர்**

விசேட நாட்களில் பூஜை நேரங்கள் மாற்றப்படலாம். THE POOJA TIME MAY BE CHANGED ON SPECIAL OCCASIONS.








## கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 - Tel : 416-321-6104

## MEMBERS ANNUAL GENERAL MEETING 2022

The 27th Annual General Meeting will be held on Saturday October 01, 2022 from 10 am to 1pm.

Time :- 10 am to 1 pm on 01/Oct/2022 Saturday
Place :- Canada Sri Ayyappa Temple

Elections for 4 New Board of Directors for 2022, will be held on Saturday Oct 29th 2022.

Time :- 10 am to 2 pm on 29/Oct/2022 Saturday
Place :- Canada Sri Ayyappan Temple Hall

### முக்கிய அறிவித்தல் :- அங்கத்தவர்களுக்கான வருடாந்த பொதுக்கூட்டம் 2022

அன்புடையீர்!

ஸ்ரீ ஐயப்ப சமாஜத்தின் 27வது பொதுக்கூட்டம், ஐப்பசி 01, 2022 சனிக்கிழமை காலை 10.00 தொடக்கம் 1 மணிவரை இடம்பெறும்.

காலம் :- 01/Oct/2022, நேரம் :- காலை 10.00 தொடக்கம், பகல் 1 மணிவரை
இடம் :- கனடா ஸ்ரீ ஐயப்ப மண்டபம்

புதிய நான்கு நிர்வாகிகளுக்கான தேர்வு ஐப்பசி 29ம் திகதி சனிக்கிழமை (29/10/2022) காலை 10 மணி தொடக்கம், பகல் 2 மணிவரை இடம் பெறும்.

காலம் :- 29/Oct/2022, நேரம் :- காலை 10.00 தொடக்கம், பகல் 2 மணிவரை
இடம் :- கனடா ஸ்ரீ ஐயப்ப மண்டபம்

மேலதிக தொடர்புகளுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்
416.321.6104, 416.321.7558

அறங்காவலர் சபையினர்

# தமிழ் அரசியல் கைதிகள் ஒரு தொடர் கதை!

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலையைப் பற்றி கடந்த வாரம் ரெலோ, ஜனாதிபதி ரணிலுடன் பேசியிருந்தது. இது தொடர்பாக தாம் கவனமெடுப்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை ரணிலும் உருவாக்கியிருந்தார்.

ஆனால், இந்த வாரம் கைதிகள் தமது விடுதலையைக் குறித்த கவன ஈர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இது ஜனாதிபதியின் நடவடிக்கைகளின் மீது நம்பிக்கையீனத்தையே உருவாக்கியுள்ளது. ஆகவே மறுபடியும் பழைய கதை தான்.

அதாவது அரசியற் பம்மாத்துத் தொடரும் என்பதாக. இதற்கு மேலும் ஒரு உதாரணம், பழைய அரசாங்கத்தைப் போலவே புதிய அரசாங்கமும் என்பதற்குச் சான்றாக 37 ராஜாங்க அமைச்சர்களின் நியமனம். ஆகவே ரணில் — மைத்திரி — மகிந்த — கோத்தபாய எல்லாமே ஒன்று தான். இந்த நிலையில் அரசியற் கைதிகள் விடயத்தில் ஒன்றும் புதிதாக நிகழும் என்று எதிர்பார்க்க முடியவில்லை.

அரசியற் கைதிகளின் வழக்கு விசாரணைகளும் விடுதலையும் கால வரையறையற்று நீடிக்கிறது. இதனால் அரசியற் கைதிகளின் அடிப்படை உரிமைகளும் அவர்களுடைய குடும்பத்தினரின் வாழ்வும் பல ஆண்டுகளாக மோசமாகச் சிதைக்கப்படுகின்றன. இது அரசியல் உள்நோக்கமுடைய அநீதியான செயற்பாடாகும்.

யுத்தம் முடிவடைந்து 13 ஆண்டுகள் கடந்த பிறகும் யுத்தகால வன்முறை அரசியற் சூழலுக்கான காரணங்கள் இல்லாதொழிந்த பின்பும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அரசாங்கம் நீக்காமல் நீடிப்பது மக்களின் மீதும் சுதந்திரமான அரசியல் உணர்வின் மீதும் விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலாகும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் அரசியல் கைதிகள் நீதியற்ற முறையில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இது கண்டனத்துக்குரிய நீதிமறுப்புச் செயற்பாடாகும்'' என்று தெரிவித்திருக்கிறார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவருமான முருகேசு சந்திரகுமார். இதே கருத்தை ஏனைய தமிழ் அரசியற் தரப்புகளும் மனித உரிமைகள் அமைப்புகளும் வெளிப்படுத்தியுள்ளன. இந்த விடயங்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் வணக்கத்துக்குரிய சக்திவேல் அடிகளின் அறிவிப்பும் இவ்வாறானதே.

இதில் சந்திரகுமாரின் கருத்துச் சற்று ஊன்றிக் கவனிக்கத்தக்கது. "அரசியற் கைதிகள் அரசியற் பிரச்சினைகளாலேயே கைதிகளாக்கப்பட்டவர்கள். அரசியற் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தினாலும் அதனுடைய நீதித்துறையினாலும் சர்வதேச சமூகத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. ஆகவே, அந்த அரசியற் பிரச்சினைகள் நியாயமான முறையில் தீர்க்கப்படுவது எவ்வளவு அவசியமானதோ அதே அளவுக்கு அந்த நோக்கில் அரசியற் கைதிகளின் விடுதலையும் அரசியல் ரீதியாக அணுகப்பட வேண்டும். ஆனால், இங்கே அவ்வாறு நடைபெறாமல் அரசியல் கைதிகளின் விடயம் வெறும் சட்டப் பிரச்சினையாக நோக்கப்படுகிறது. இதுவே அரசியல் கைதிகளின் விடுதலையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடையாகும். இது தவறானதாகும்.

எனவே இனியும் தாமதிக்காமல் இதை அரசியல் தீர்மானத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பது நமது கவனத்திற்குரியது என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். இது முக்கியமான ஒன்றாகும். இந்தப் பிரச்சினையை சட்டப் பிரச்சினையாகப் பார்த்தால் இப்போதைக்கு முடிவில்லை. இதை ஒரு அரசியல் விவகாரமாகவே அணுக வேண்டும். அப்பொழுது தான் தீர்வு கிட்டும். இதையே ரெலோவும் கேட்டுள்ளது.

முதலில் அரசியற் கைதிகள் என்று குறிப்பிடப்படுவதை நாம் நிறுத்த வேண்டும். ஏனென்றால், இவர்கள் உண்மையிலேயே கைதிகள் இல்லை. குற்றவாளிகளும் இல்லை. அரசாங்கமும் அதனுடைய சட்டத்துறையும் இவர்களைக் குற்றவாளிகளாகவும் கைதிகளாகவும் அடையாளப்படுத்துகின்றனவே தவிர இவர்கள் மக்களின் விடுதலையை நோக்கிய செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள். அதற்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து உழைத்தவர்கள். (இதில் மாற்றுப் பார்வைகள், மறுநிலைப்பாடுகள் இருக்கலாம்).

மக்களுடைய விடுதலைக்கான அரசியலை முன்னெடுப்போரை பொது



வாகவே எந்த அரசும் உவப்போடு பார்ப்பதில்லை. அதிலும் ஒடுக்கு முறையை மேற்கொள்ளும் அரசுகள் இவர்களை எதிரிகளாகவே கருதும். இதுவே இங்கும் நடந்துள்ளது. தமது மக்களின் விடுதலைக்காக காந்தி எப்படிச் சிறையில் அடைக்கப்பட்டாரோ, எப்படி மண்டேலா சிறையில் தள்ளப்பட்டாரோ, எவ்வாறு ஃபிடலுக்குச் சிறை விதிக்கப்பட்டதோ அவ்வாறே இவர்களுக்கும் சிறை விதிக்கப்பட்டது. அவர்கள் எல்லாம் எப்படி குற்றவாளிகள் இல்லையோ அவ்வாறே இவர்களும் குற்றவாளிகளில்லை. அவர்களெல்லாம் எப்படி விடுதலையாளராகக் கொள்ளப்படுகின்றனரோ அவ்வாறே இவர்களும் விடுதலையாளர்கள்.

ஆகவே இவர்கள் உண்மையான அர்த்தத்தில் ஒடுக்குமுறைக்கும் அதிகாரத்துக்கும் எதிரானவர்கள். மக்களுக்கான விடுதலையாளர்கள். தமது வாழ்வைப் பற்றிச் சிந்திக்காமல், தமது குடும்பத்தின் நலனைப் பற்றிப் பொருட்படுத்தாது, மக்களின் நலனைப் பற்றியும் சனங்களின் வாழ்வைப் பற்றியும் சிந்தித்தவர்கள். எனவே விடுதலையை நோக்கிய சமூகம் இவர்களைக் கைதிகள் என்று கருதவோ குறிப்பிடவோ கூடாது. விடுதலையாளர்கள் என்றே உணர்ந்திருக்க வேண்டும்.

அடுத்தது, இவர்களைக் குற்றவாளிகளாகவும் கைதிகளாகவும் அடையாளப்படுத்தித் தொடர்ந்து — காலவரையறுத் — தடுத்து வைத்திருக்கும் அரசு இவர்களை மட்டும் தண்டிக்கவில்லை. இவர்களைச் சேர்ந்தவர்களையும் தண்டிக்கிறது. இவர்களைத் தடுத்து வைத்திருப்பதன் மூலம் இவர்களைத் தனிமைப்படுத்துகிறது. குடும்பத்தை இவர்களிடமிருந்தும் குடும்பத்திலிருந்து இவர்களையும் பிரித்துத் தனிமைப் படுத்துகிறது.

அவ்வாறே சமூகத்திலிருந்தும் இவர்களையும் இவர்களிலிருந்து சமூகத்தையும் பிரித்து வைத்திருக்கிறது.

இதன்மூலம் இவர்களுடைய அரசியல் உணர்வையும் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தித் தனக்கான நெருக்கடிகளைத் தணித்துக் கொள்ளப் பார்க்கிறது. கூடவே விடுதலையை நோக்கிய ஏனைய செயற்பாட்டாளர்களுக்கும் கூட்டு அச்சுறுத்தலை விடுக்கிறது. ஒடுக்குமுறைக்கு எதிரான விடுதலையை நோக்கிய அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவோர் இவ்வாறு சிறைப்படுத்தப்படுவர். காலவரையறையற்றுத் தடுத்து வைக்கப்படுவர் என்ற அச்சுறுத்தலை அரசு மறைமுகமாக ஏற்படுத்துகிறது.

இதற்கு நல்லதொரு உதாரணம், அரகலய என்ற அண்மைய காலிமுகத் திடல் (**Gota Go Gama**) போராட்டக்காரர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்படுவதும் தடுத்து வைக்கப்படுவதுமாகும்.

இதை விடுதலையை நோக்கிய சமூகத்தினர் தமது கவனத்திற் கொண்டு இதற்கு எதிரான தமது எதிர்ப்பை வலுப்படுத்த வேண்டும். இதற்கான போராட்டங்கள் மேற்குறித்த விடுதலையாளர்களால் ஏற்கனவே சிறைக் கொட்டடிகளில் நடத்தப்படுகின்றன. இதற்கு ஆதரவாக பல்வேறு இடங்களிலும் சில தரப்பினர் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இலங்கையில் ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் அரசியல் கைதிகளாக அடையாளப்படுத்தப்பட்ட விடுதலையாளர்கள் அரசியல் தீர்மானங்களின் மூலம் விடுவிக்கப்பட்ட முன்னுதாரணங்கள் பலவுண்டு. விடுதலை இயக்கங்களுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுகளின் போதெல்லாம் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த விடுதலையாளர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இலங்கை இந்திய உடன்படிக்கையின் போதும் இந்த விடயம் முதன்மைக் கரிசனையில் எடுக்கப்பட்டு, பல்லாயிரக் கணக்கான விடுதலையாளர்கள் விடுவிக்கப்பட்டனர். இதற்குப் பிறகு பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்திலும் இவ்வாறு சிறை பிடிக்கப்பட்டிருந்த விடுதலையாளர்கள் ஈரோஸ் இயக்கத்தின் முயற்சியினால் விடுவிக்கப்பட்டதுண்டு.

ஆகவே இந்த விடயம் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையிலேயே கையாளப்பட வேண்டும். ஒரு போதும் சட்ட ரீதியில் சாத்தியப்படுத்த முடியாதது. சட்டரீதியில் அணுக முற்பட்டால் இவர்கள் மீட்சியற்றுக் கடுமையான தண்டனைக்குள்ளாக வேண்டியிருக்கும். இதை ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் மக்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படி ஏற்றுக் கொண்டால் அந்தச் சமூகம் விடுதலைக்காகப் போராடுவதாக கருத முடியாது. அதற்கு விடுதலை சாத்தியமாகப் போவதுமில்லை.

யுத்தம் முடிவடைந்து 13 ஆண்டுகள் கடந்து விட்டன. இப்பொழுது பகை மறப்பு, மீளிணக்கம், அமைதித் தீர்வு நோக்கிய செயற்பாட்டுக் காலம் என பிரகடனப்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் முக்கியமானது, பகைமறப்பிற்கும் மீளிணக்கத்துக்குமான நடவடிக்கைகளாகும். இதற்கு அடிப்படையானது பாதிக்கப்பட்ட மக்களின் உளநிலையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதே. அந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்புதில் ஒரு முதன்மைப் புள்ளி, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலையாளர்களை விடுதலை செய்தலாகும். இதற்கான அரசியல் தீர்மானத்தை எடுத்தலாகும்.

ஆனால், இதை அரசாங்கம் செய்யவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் தம்மைப் பிணைத்திருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இதைப் பொறுப்பேற்கவில்லை. அந்த அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தில் இந்த விடயமும் உள்ளடக்கப்பட்டிருந்தது என்பதைச் சம்மந்தன் மறந்து போய் விட்டார். மைத்திரியும் ரணிலும் கூட மறந்து விட்டனர். இப்பொழுது தாராள ஜனநாயகவாதி என்ற அடையாளத்தைக் கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியும் செய்யவில்லை. செய்யக் கூடிய நிலை தெரிவதாகவும் இல்லை.

எனவே இந்த நாட்டிலே நல்லெண்ணத்தை உருவாக்கும் வகையிலான செயற்பாட்டை அரசாங்கமும் எதிர்க்கட்சியிலிருக்கும் பங்காளிகளான கூட்டமைப்பும் ஐக்கிய மக்கள் சக்தியும் தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் முஸ்லிம் கட்சிகளும் முன்னெடுக்கவில்லை என்பது தெளிவு. ஏற்கனவே அரசியல் தீர்வுக்கோ அமைதிச் சூழலுக்கோ பகை மறப்பிற்கோ ஏற்ற சூழலை உருவாக்குவதில் கரிசனையற்றிருக்கும் அரசாங்கமும் இந்தக் கூட்டும் இதில் மட்டும் எப்படிச் சரியாக —நியாயமாக நடந்து கொள்ளும் என யாரும் கேட்கலாம்.

ஆனால், அரசாங்கமும் இந்தக் கூட்டினரும் இவற்றைச் செய்யாமல் தவிர்க்கவோ தப்பவோ முடியாது. அப்படித் தவிர்த்தால், தப்பினால் அது தொடர்ந்து செய்யப்படும் தவறு என்றே அமையும். அப்படி ஒரு அரசாங்கம் தவறு செய்யுமாக இருந்தால் அது முழுமையாக நாட்டையே பாதிக்கும். நாட்டைப் பாதிப்படையச் செய்வதென்றால், அதன் அர்த்தம் மக்களைப் பாதிப்படையச் செய்கிறது என்பதன்றி வேறென்ன? எனவே இதில் உள்ள அபாய நிலைமையைக் கவனத்திற் கொண்டு அனைத்து மக்களும் தமது கூட்டுக் குரலை இந்த விடுதலையாளர்களின் விடுதலைக்காக ஓங்கி ஒலிக்க வேண்டும்.

மண்டேலாவின் விடுதலையே தென்னாபிரிக்காவில் நீடித்துக் கொண்டிருந்த அரசியல் முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டு வந்தது. அங்கே நிலையான அமைதி திரும்புவதற்குக் காரணமாகியது. காந்தியின் விடுதலையே இந்திய சுதந்திரத்துக்கான ஏது நிலைகளைத் தந்தன. உலகம் முழுவதிலும் இதுவே நடைமுறை. இதுவே அனுபவம். (20ம் பக்கம் பார்க்க)

# குவாட் கவனத்தைத் திருப்பிய சீனா

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



சீனா யுவான் வாங்5 கப்பலை அம்பாந்தோட்டையில் நிறுத்திய அதேவேளை, தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, பசுபிக் பிராந்தியத்தில் உள்ள சொலமன் தீவுகளில் அமெரிக்க மற்றும் பிரித்தானிய போர்க்கப்பல்கள் நிறுத்துவதையும் தடுத்து நிறுத்தியது.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுதிஸ்ரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய குவாட் அமைப்பின் வெளிவிவகார அமைச்சுக்களின் உயர்மட்ட அதிகாரிகள் கூட்டம் கடந்த 5ஆம், 6ஆம் திகதிகளில் புதுடில்லியில் இடம்பெற்றிருந்தது.

இந்தக் கூட்டத்தில், மூன்று முக்கிய விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அதில் இரண்டு விடயங்கள் குவாட் நாடுகளுடன் நேரடியாகத் தொடர்புடைய- அவற்றின் கொள்கை சார்ந்த பொதுவான அம்சங்கள்.

மூன்றாவது விடயம், இலங்கை நிலவரங்கள் மற்றும் விவகாரங்கள் தொடர்பானது. இது குவாட் அமைப்புடன் நேரடியாகத் தொடர்பு படாதது.

குவாட் அமைப்பின் வெளிவிவகார அமைச்சு உயர் அதிகாரிகளின் கூட்டத்தில், பிராந்திய பூகோள நிலைமைகளின் முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்பட்டதோ, திறந்த, வெளிப்படையான, சுதந்திரமான கப்பல் போக்குவரத்து என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டதோ ஆச்சரியமானதல்ல.

இந்த அமைப்பின் உருவாக்கத்துக்கு இவையும் முக்கியமான காரணங்களாக இருந்தன. ஆனால், இலங்கை விவகாரம் குவாட்டுடன் நேரடியாகத் தொடர்புடையதாக இருக்கவில்லை.

இலங்கையின் பொருளாதார நிலவரங்களும், சீனாவின் நகர்வுகளும், குவாட் அமைப்பின் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்திருக்கிறது.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சீனா முக்கியமானதொரு காரணி என்ற குற்றச்சாட்டுகள் பரவலாக கூறப்படுகிறது.

சீனாவும் இலங்கையும் அதனை மறுத்தாலும், இந்தியாவும், மேற்குலக நாடுகளும் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

இலங்கைக்கு கடன்களை வழங்கிய போது மென்போக்கையும், அதனை அறவிடும் போது கடும் போக்கையும் கடைப்பிடித்த சீனா, மோசமான சிக்கலுக்குள் இலங்கை மாட்டிக் கொள்வதற்கு வழி வகுத்தது.

அதேவேளை சிக்கலில் இருந்து மீள்வதற்கு சீனாவிடம் இருந்து குறிப்பிடத்தக்க உதவிகள் ஏதும் கிடைத்திருக்கவில்லை. சேதன உர விவகாரத்தில் சீனா கடும்போக்கில் நடந்து கொண்டது. அதற்காக செலுத்தப்பட்ட 6.9 மில்லியன் டொலர்களுக்கு உரத்தை வழங்கவும் மறுத்து வருகிறது.

ஆனால் இந்தியா கிட்டத்தட்ட 4 பில்லியன் டொலர்கள் வரை உதவிகளை வழங்கியது. ஆனாலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அது போதுமானதாக இல்லை.

இவ்வாறான நிலையில், இலங்கையின் கடன் நிலுவைகளைப் பயன்படுத்தியும், தனது தனிப்பட்ட செல்வாக்கை பயன்படுத்தியும், அரசியல் குழப்பங்கள் நிறைந்திருந்த சூழலில், சர்ச்சைக்குரிய 'யுவான் வாங் 5' என்ற கண்காணிப்புக் கப்பலை இலங்கைக்கு அனுப்பி வைத்தது.

அந்தக் கப்பலின் இலங்கை வருகைக்கு இந்தியா வெளிப்படையான எதிர்ப்பை வெளியிட்டிருந்த போதும், சீனா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் அதனை நிறுத்தியது.

இது இந்தியாவுக்கும், மேற்குலகத்துக்கும் சவாலானதொரு நிலையை ஏற்படுத்தியுள்ளது.



இலங்கைக்கு அதிக கடன்களை வழங்கும் உதவிகளை வழங்கும் நெருங்கிய உறவுகளைப் பேணும், இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இதனால் அதிர்ச்சி அடைந்தன. தங்களின் எதிர்ப்பை மீறி- இலங்கையில் தான் எதிர்பார்க்கின்றவற்றை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய நிலையில் சீனா இருப்பது, குவாட் நாடுகளுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக மாறியிருக்கிறது.

'யுவான் வாங் 5' கப்பலை சீனா அம்பாந்தோட்டையில் நிறுத்திய அதே வேளை, தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, பசுபிக் பிராந்தியத்தில் உள்ள சொலமன் தீவுகளில் அமெரிக்க மற்றும் பிரித்தானிய போர்க்கப்பல்கள் நிறுத்துவதையும் தடுத்து நிறுத்தியது.

சொலமன் தீவுகள் முன்னர் அவுஸ்திரேலியாவின் செல்வாக்குக்கு உட்பட்டதாகத் தான் இருந்தது. ஆனால் அண்மையில் சொலமன் தீவுகளுடன் சீனா பாதுகாப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டது.

அந்த உடன்பாட்டைத் தடுப்பதற்கு அவுஸ்ரேலியா மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை. இதையடுத்து, சொலமன் தீவுகளில் சீனா தளத்தை அமைக்கவுள்ளதாக தகவல்கள் வெளியான போதும், சொலமன் தீவுகள் அதனை மறுத்து வருகிறது.

சொலமன் தீவுகளில் சீனா தளத்தை அமைத்தால் அது, அவுஸ்திரேலியாவுக்கு நேரடியான அச்சுறுத்தலாக அமைவதுடன் அமெரிக்காவின் மேற்குப் பகுதி தளங்களுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியது.

இந்த நிலையில் அமெரிக்கா மறைமுகமாகவும், சீனா நேரடியாகவும், அழுத்தங்களைக் கொடுத்த போதும், சீனாவுடன் சொலமன் தீவு பாதுகாப்பு உடன்பாட்டை செய்து கொண்டது.

சட்டவிரோத மீன்பிடியைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அமெரிக்க கடலோரக் காவல்படையின் 'ஒலிவர் ஹென்றி' என்ற போர்க் கப்பலும், பிரித்தானிய கடற்படையின் 'எச்எம்எஸ் ஸ்பே' என்ற போர்க்கப்பலும் விநியோக தேவைகளுக்காக, சொலமன் தீவு துறைமுகத்துக்கு செல்ல முயன்ற போது அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இதனால் அந்தப் போர்க 'கப்பல்கள் வேறு துறைமுகங்களை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஒரு பக்கத்தில் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் குவாட் நாடுகளின் எதிர்ப்பை மீறி சீனா தன் கண்காணிப்புக் கப்பலை நிறுத்துகிறது.

இன்னொரு பக்கத்தில் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி அமெரிக்க, பிரித்தானிய போர்க்கப்பல்களை சொலமன் தீவுகளில் நிறுத்த விடாமல் தடுக்கிறது.

இந்தோ- பசுபிக்கில் சீனா இப்போது ஆக்ரோசத்துடன் செயற்படத் தொடங்கியிருப்பது குவாட் அமைப்புக்கு நேரடியான அச்சுறுத்தலாக மாறியிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில், இலங்கையின் பலவீனமான அரசியல் சூழலும், பொருளாதார நெருக்கடியும் சீனாவுக்கு இடமளிப்பதாக மாறி விடக்கூடாது என்று குவாட் நாடுகள் உணர்கின்றன.

சில நாட்களுக்கு முன்னர் சீன கற்கைகளுக்கான சென்னை நிறுவனம் இந்தியப் பெருங்கடலில் சீனாவின் செல்வாக்கு தொடர்பான ஒரு கலந்துரையாடலை நடத்தியது. அதில் உரையாற்றிய இந்திய இராணுவத்தின் முன்னாள் அதிகாரியான லெப்.ஜெனரல் பி.ஆர் சங்கர், இலங்கையில் சீனாவின் தலையீட்டை தடுக்க, இந்தியாவும், ஜப்பானும் இணைந்து செயற்பட முடியும் என்று தெரிவித்திருந்தார்.

இரண்டு நாடுகளும் இலங்கையுடன் கொண்டுள்ள ஆழமான உறவுகள் மற்றும் உதவிகளை வழங்கிய நாடுகள் என்ற வகையில் இந்த விடயத்தில் ஒன்றிணைந்து செயற்பட முடியும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை, விடுதலைப் புலிகள் காலத்தில் இந்திய அமைதிப் படையை அனுப்பியது போல, இந்தியா மீண்டும் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது என்றும் அவர் எச்சரித்திருக்கிறார்.

இது இந்தியாவை ஓரங்கட்டுவதற்கு வழி வகுத்தது என்றும், சீனா உள்நுழைவதற்கான இடத்தை உருவாக்கியது என்றும் லெப்.ஜெனரல் பிஆர் சங்கர் தெரிவித்திருக்கிறார்.

புது டில்லியில் குவாட் நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகள் நடத்திய சந்திப்பின் போதும், இலங்கையின் அரசியல் மற்றும், பொருளாதார நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டிருக்கின்றது.

ஆனால் அது பெரும்பாலும் நிதியுதவிகளைக் கொண்டு இலங்கையை தங்களின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்கான உத்தியாக இருக்குமே தவிர, பாதுகாப்பு ரீதியாகவோ, உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்வதாகவோ இருக்காது என்றே கருதப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை உறுதிப்படுத்துவதில், அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளால் தீர்க்கமான பங்கை வகிக்க முடியும் என்பதே, சர்வதேச இராஜதந்திரிகளின் கருத்தாக உள்ளது.

இலங்கை விவகாரத்தில் குவாட் நாடுகள் அல்லது மேற்குலக நாடுகள் முடிவுகளை எடுக்கும் போது, சீனாவை மனதில் கொண்டே, திட்டமிடல்களை செய்ய முனைகின்றன.

ஆக, சீனா தான் இப்போது உலகின் மையப் புள்ளியாக மாறுகிறது. தெரிந்தோ தெரியாமலோ, குவாட் நாடுகள் அதற்குப் பலியாகிக் கொண்டிருக்கின்றன.

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய
முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் இலங்கை!

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
-K.T.கணேசலிங்கம்-



இலங்கை இந்திய உறவு பற்றிய தேடல் சமகாலப் பகுதியில் அதிகமானதாக காணப்படுகிறது. காரணம், ஈழத்தமிழர் இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த முடியாத நிலையில் தென்னிலங்கை ஆட்சியாளர்களும் அதன் கொள்கை வகுப்பாளர்களும் இந்தியாவை கையாள்வதில் வெற்றிகரமாக இயங்குவதாக விவாதங்கள் உண்டு.

சிங்கள அரசியல் களம் சீனாவை முதன்மைப்படுத்திக் கொண்டு இந்தியாவை வளைத்துப் போடுவதில் வெற்றி பெறுகின்றது. அதே நேரம் சீனாவை முன்னிறுத்தி ஈழத்தமிழர் கள் இந்தியாவை கையாள முடியாதவர்களாக காணப்படுகின்றனர். அதற்கு இந்தியாவின் வலுவானது சீனாவுக்கு நிகரானதாக இல்லாமையே பிரதானமான காரணமாகத் தெரிகிறது.

இலங்கைக்குள் சீனாவின் வருகையை தாம் பார்த்துக் கொள்வதாக ஈழத்தமிழர்களுக்கு தெரிவிக்கும் இந்தியா, சீனாவின் இலங்கை நெருக்கத்தை தடுக்க பொருளாதார ஒத்துழைப்பையும் இலங்கையுடனான உறவையும் அதிக புரிதலுடன் மேற்கொண்டு வருகின்றதை காணமுடிகிறது. இக் கட்டுரையும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மிலிந்த மொரகொட வெளியிட்ட அறிக்கை தொடர்பிலான தேடலாகவே அமையவுள்ளது.

முதலில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மிலிந்த மொரகொட புதுடில்லியில் ஊடகங்களுக்கு இலங்கை - இந்திய உறவு பற்றி தெரிவிக்கும் போது, இந்தியாவின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்காக பயன்படுத்தப்படுவதை இலங்கை அனுமதிக்காது என்றும் 1987ஆம் ஆண்டு முதல் இந்தியாவுக்கு இலங்கை இந்த உறுதிமொழியை அளித்துள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் 1987 ஆம் ஆண்டு முதல் இலங்கை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மேற்கொண்ட விடயங்கள் அதிகமானவை. அவை அனைத்தையும் மறைத்து விட்டு அல்லது மறந்து விட்டு தூதுவர் 1987 முதல் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலுக்காக இலங்கைத்தீவு பயன்படுத்தப்படுவதை அனுமதிக்காமைக்கான உறுதிமொழியை அளித்துள்ளதாக குறிப்பிடுகின்றார். 1987களுக்குப் பின்னர் இலங்கைத் தீவு இந்தியாவின் பாதுகாப்புக்கு ஏற்படுத்திய அச்சுறுத்தலை நோக்குவது பொருத்தமானதாக அமையும்.

முதலாவது, இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் வரவுக்கு காரணமாக அமைந்த விடயம், அமெரிக்க-இலங்கை நெருக்கமாகும். குறிப்பாக 1984 ஆம் ஆண்டு கொழும்புக்கு வடக்கே அமைந்துள்ள அமெரிக்க வானொலி நிலையத்தை விஸ்தரிக்கவும் மேம்படுத்தவும் அமெரிக்காவுடன் ஓர் உடன்பாட்டை இலங்கை மேற்கொண்டிருந்தது. அப்போது நிலவிய பனிப்போரில் அமெரிக்க எதிர் இந்தியா என்ற நிலைப்பாடு நிலவிய காலம். இது உலகிலேயே இரண்டாவது மிகப் பெரிய அமெரிக்க வானொலி நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏனெனில் ஜே.ஆர்.ஜெயவர்தன ராஜீவ் காந்தி பரிமாறிக் கொண்ட கடிதத்தின் பிரகாரம் இந்தியாவின் ஒப்புதலின்றி இலங்கையின் கடல் மற்றும் ஆகாய பிரதேசத்தை வேறு எந்த நாட்டுக்கும் வழங்கக்கூடாது என குறிப்பிட்டிருந்தது. ஆனால் அதனையெல்லாம் மீறிய இலங்கை அரசாங்கம், இலங்கை இந்திய உடன்பாட்டை கைவிட திட்டமிட்டது. ஜனாதிபதி ஆர். பிரேமதாச விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டு இந்திய இராணுவத்தை வெளியேற்றியது.

தென்னிலங்கையில் எழுச்சி பெற்ற ஜே.வி.பி.இன் கிளர்ச்சியையும் வடக்கு, கிழக்கில் தனிநாட்டுக்குப் போராடிய ஆயுதப் போராட்டத்தையும் ஒரே நேரத்தில் தோற்கடிக்க உதவிய இந்தியாவை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் எதிர்ப்பு அரசியலுக்குள்ளால் வெளியேற்றினர்.

இரண்டாவது, இலங்கை -இந்திய ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட இந்திய



பிரதமர் - ராஜீவ்காந்தியை இராணுவ அணிவகுப்பின் போது விஜயவீரா என்ற கடற்படைச் சிப்பாய் தாக்கிய போதும் மூளை சுகயீனத்தினாலேயே அவர் ராஜீவை தாக்க முயன்றார் என்று குறிப்பிட்டதோடு, பின்னர் ஜனாதிபதியான பிரேம்தாசவால் விஜயவீரா விடுதலை செய்யப்பட்டார். அவர் பின்னர் தேர்தலிலும் போட்டியிட்டதுடன், விஜயவீரா தனது தேர்தல் பிரசாரத்தில் ராஜீவை தாக்கிய ஒளிப்படத்துடன் இந்திய எதிர்ப்பு வாதத்தை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஒரு நாட்டின் தலைவரை கொல்ல முயற்சித்தமை கொலைக்கு ஒப்பானதே. அத்தகைய செயல் இந்தியாவுக்கு அச்சுறுத்தலானதே. ராஜீவ்காந்தி கொல்லப் பட்டதை முதன்மைப்படுத்தும் இந்தியா, விஜயவீராவின் முயற்சியை முற்றாகவே மறந்துவிட்டது.

மூன்றாவது, 2002இல் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தேசிய அரசாங்கம் இலங்கையின் வடக்கு, கிழக்கின் துறைமுகங்களையும் வான் பரப்பினையும் அமெரிக்கா பயன்படுத்தலாமென ஓர் உடன்படிக்கையினை மேற்கொண்டது. அத்துடன் அமெரிக்கக் கப்பல்கள் பல இலங்கையின் துறைமுகப் பகுதிகளில் வருகை தந்ததை அறிய முடிந்தது. இந்தியாவையும் அமெரிக்காவையும் மட்டுமன்றி சீனாவையும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் செல்வாக்குச் செலுத்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை வாய்ப்பளித்தது.

அக்காலப் பகுதியில் வடக்கு, கிழக்கு ஆழ்கடல் பகுதிகளில் சீனா மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்குரிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது பற்றிய சர்ச்சைகளில் பாராளுமன்றத்தில் ஐ.தே.மு. அரசாங்கம் கூறிய விடயம் நினைவு கோரத்தக்கது. இலங்கைக்கும் சீனாவுக்குமான உறவு பொருளாதார இராணுவ மட்டத்தில் பாரம்பரியம் மிக்கது. தேசிய பொருளாதாரத்திலும் தேசிய அபிவிருத்தியிலும் சீனாவின் உதவி கள் இலங்கைக்கு நீண்டகாலமாகக் கிடைத்துள்ளன. இலங்கையில் நிகழும் சமாதான நடவடிக்கைகளில் தலைமைத்துவத்தையும் முக்கியத்துவத்தையும் சீன அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியதுடன், சீனாவின் ஆதரவை எமது அரசாங்கம் கோரியிருந்தது எனத் தெரிவித்தது.

நான்காவது, 2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டமானது, சீனாவுடனான கடல் பாதுகாப்புக் கொள்கையை விரிவாக்க உதவியது. இதன் அபிவிருத்தியானது, 2017 முழுமையாக நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் சீனாவுக்கு 99 வருடத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. இது ஒன்றும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயமாக இல்லையா என்பது பிரதான கேள்வியாகும். இலங்கை 2010ஆம் ஆண்டு சீனாவுடன் இணைந்து கொண்டு கிழக்கு மாகாணத்திலுள்ள கடல் பிரதேசத்தின் இராணுவ ஒத்திகையை மேற்கொண்டமை எதுவும் இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படுத்தாத விடயமாக கொள்ள முடியுமா? இந்த இராணுவ ஒத்திகையில் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு ஆகிய நாடுகளின் படைகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் 2012 ஆம் ஆண்டு ஜஜீன் மாதம் 29 ஆம் திகதி 5 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியங் குவாங்லி இலங்கை வந்திருந்தார்.

சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு மேற்கொண்ட முதல் விஜயம் இதுவாகும். இதன் போது அவருடன் இணைந்து 23 உயர் அதிகாரிகள் வருகை தந்திருந்தார்கள். இலங்கை மீது சீனாவிற்குள்ள உச்சமட்ட நலன்களை எடுத்துக்காட்டும் விடயம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயமாகத் தெரியவில்லையா?

ஐந்தாவது, இறுதிக்கட்ட ஈழப்போர் 2009 இல் நிகழ்ந்த போது சீனாவின் ஆயுத தளவாடங்கள் உட்பட கடல் தரை சார்ந்த கண்காணிப்பினை மேற்கொள்ள ராடர்கள், போர் விமானங்கள், ஆட்லறிகள் ஆகியவற்றை பெற்றதோடு பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளின் ஆயுத தளவாடங்களையும் இலங்கை கொள்வனவு செய்தது.

ஆறாவது, 2014இல் சீனாவின் கடல் பாதுகாப்புக் கொள்கையில் ஒன்றான பட்டி மற்றும் சாலை முன்முயற்சியில் இலங்கை இணைந்து கொண்டமையும் அதன் ஓரங்கமாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியமை ஒன்றும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இல்லாத விடயங்களாக கொள்ள முடியுமா?

அதே காலப்பகுதியில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தரித்திருந்தமை இந்தியப் பாதுகாப்புக்கு விரோதமான விடயமாக கொள்ள முடியாதா?

அண்மையில் யுவான் வாங்-5 ஆய்வுக் கப்பலானது கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்திருந்தமை இந்து சமுத்திரத் திற்கும் இந்தியாவுக்கும் எந்த அச்சுறுத்தலும் இல்லை என்று கருத வாய்ப்புள்ளதா? அமெரிக்காவுக்கான இந்திய முன்னாள் தூதுவர் ஆவிரி குறிப்பிடும் போது, இலங்கைத் தீவில் சீனாவின் இராணுவத் தளம் சாத்தியமாகுமாயின் இந்தியாவின் பிரதான நிலத்திலுள்ள மையங்கள் அனைத்தையும் சீனா ஒரு மணி நேரத்தில் ஏவுகணைத் தாக்குதலால் மட்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடும் என்கிறார்.

இலங்கைத் தீவு சுதந்திரத்திற்குப் பிந்திய காலம் மட்டுமல்ல ஆரம்ப காலத்திலிருந்தே இந்தியாவுக்கு எதிரான கொள்கையுடைய நாடாகவே செயல்பட்டுள்ளது. சுதந்திரத்தின் போது பிரித்தானியாவுடனும் பின்பு அமெரிக்காவுடனும் தற்போது சீனாவுடனும் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது. இந்த நாடுகளுடனான இலங்கையின் உறவின் போது அந்த நாடுகள் இந்திய எதிர்ப்பினைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியா மீதான எதிர்ப்பினைக் கொண்டே இலங்கைத் தீவின் இருப்பும் வெளி வல்லரசுகளது இந்து சமுத்திர நலனும் காணப்படுகிறது. இரண்டும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளது. எனவே மிலிந்த மொரகொட குறிப்பிடுவது போல் அல்லாது இந்தியாவுக்கு விரோதமான போக்கினையே தென்னிலங்கை ஆட்சியாளர்கள் பின்பற்றி வருகின்றனர். இதனை கண்டு கொள்ளாத இந்தியத் தலைவர்களும் கொள்கை வகுப்பாளர்களும் இந்தியாவை தோற்கடிக்க வழியமைத்துக் கொண்டுள்ளனர்.

இதற்கான காரணம் இந்தியத் தலைவர்களதும் கொள்கை வகுப்பாளர்களது மேலாதிக்க உணர்வு அல்லது இந்தியாவின் இயலாமையை மறைப்பதற்கான நடவடிக்கைகளாக உள்ளன. எது எவ்வாறாயினும் தென்னிலங்கை இந்திய எதிர்ப்புவாதத்தையே கொண்டுள்ளது.

அதுவே இலங்கைத் தீவின் இருப்பும் பாதுகாப்புமாகும். மிலிந்த மொரகொடவினது கருத்து போன்றே டி.எஸ். சேனநாயக்க முதல் ரணில் விக்கிரமசிங்க வரை இந்தியாவை கையாள பயன்படுத்தும் உரையாடலாக உள்ளன. தற்போது அமெரிக்காவினது ஆழ்கடல் பாதுகாப்புக் கப்பல் ஒன்று இலங்கைக் கடற்படையில் இணைப்பதற்காக கொழும்புத் துறைமுகத்தை நோக்கி வருகை தருகிறது.

# சாதிப்பாரா ராகுல்காந்தி?



இந்திய அரசியலில் மாற்றம் ஏற்படுவதற்கான விதை விதைக்கப்பட்டிருப்பது தற்போது உணரப்படும் நிலைமைகள் ஆரம்பமாகி வருகின்றது. காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரான ராகுல் காந்தி கன்னியாகுமரியில் இருந்து 'இந்திய ஒற்றுமை' பயணத்தை கடந்த ஏழாம் திகதியன்று தொடங்கியிருக்கிறார்.

இதனை தமிழக முதல்வரும், காங்கிரஸின் வலிமையான கூட்டணிக் கட்சியுமான தி.மு.க.வின் தலைவர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து ஆரம்பித்து வைத்துள்ளார். தமிழகத்தில் செப்டெம்பர் 8.9.10 ஆகிய மூன்று நாட்களில் நடைபயணம் மேற்கொண்டுள்ள ராகுல் காந்திக்கு தமிழகத்தின் தென்பகுதியில் திரளான ஆதரவு கிடைத்துள்ளது.

இந்நிலையில் மக்களின் நலன்களுக்காக பாடுபடும் அரசியல் கட்சியை, குறிப்பாக அ.தி.மு.க.வை மாதக்கணக்கில் செயற்பட விடாமல், நீதிமன்றங்களின் வழியாக நிர்மூலமாக்கும் உத்தியை பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு, தொடர்ந்து மேற் கொண்டு வருகிறது. இந்நிலையில் அ.தி.மு.க. தொண்டர்கள், நிர்வாகிகள், தலைவர்கள் என்று அனைவரும் எடப்பாடி தலைமையில் ஒரு நீண்ட நெடிய போராட்டத்திற்கு தயார் படுத்திக் கொள்ள வேண்டுமென்ற கருத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

பா.ஜ.கவை பகைத்துக் கொண்டால், எடப்பாடி அணியினர் மீது அமலாக்கத் துறை, வருமான வரித்துறை, மத்திய குற்ற விசாரணைப் பிரிவினர் போன்ற மத்திய அரசின் கட்டமைப்புக்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்து அக்கட்சியை சிதறடிக்கலாம் என்ற அச்சம் அதிகமாக உள்ளது.

நன்முறையில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி அரசையே பா.ஜ.கவினர் துளைத்தெடுக்கிறார்கள். ஊழல்கறை படிந்த அ.தி.மு.கவை அவர்கள் சும்மா விட்டு வைப்பார்களா? என்ற கேள்விகளும் உள்ளன.

அதே தருணத்தில் அ.தி.மு.கவின் பலவீனமான நிலையைக் கண்டு, தி.மு.கவும் தன் பாணியில் கட்சியின் இரண்டாம் கட்ட மற்றும் மக்கள் செல்வாக்குள்ள தலைவர்களை தங்கள் கட்சியில் இணைத்துக் கொள்ளும் அணுகுமுறையையும் விரிவுப்படுத்தி வருகிறது.

இதனால் அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் எடப்பாடி பழனிச்சாமி, மன உறுதியுடன் எத்தனை காலத்திற்கு போராடுகிறார் என்பதை பொறுத்து தான் அக்கட்சியின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது.

அத்துடன் சட்ட ரீதியான அலைகழிப்பை தொடர்ச்சியாக உண்டாக்கி, அ.தி.மு.கவின் வீரியமும், வலிமையும் குறையும் வரை மேல் முறையீடுகள் தொடரக்கூடும் என்றும் தெரிக்கப்படுகின்றது. இவ்விடயத்தில் பன்னீர் செல்வம் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி ஆகிய இருவரும் நேரடியாக பேச்சு வார்த்தை நடத்தி, சுமுகமான முடிவுக்கு வருகை தந்தால் மட்டுமே இவ்விடயத்தில் தெளிவான விடை கிடைக்கும் என்பதே யதார்த்தமாகவுள்ளது.

இதனிடையே பா.ஜ.க., அ.தி.மு.கவின் முன்னணி தலைவரான பன்னீர்ச் செல்வத்துக்கு தீவிர ஆதரவு வழங்குகின்றது என்றே அனைவரும் நினைக்கிறார்கள். ஆனால் அண்மையில் எடப்பாடி அணியின் முக்கிய தளபதிகளில் ஒருவரான முன்னாள் அமைச்சர் வேலுமணி மீது அறப்போர் இயக்கம் தொடுத்த ஊழல் வழக்கு ஒன்றில், அவர் சார்பாக வாதாட மத்திய அரசின் சட்டத்தரணி ஆஜரானார். இது அரசியல் உலகில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த ஒரு விடயத்தை கையில் எடுத்திருக்கும் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க., 'பா.ஜ.க. அரசின் ஊழலுக்கு இடமில்லை என்றும், பிரதமர் மோடி ஊழலுக்கு எதிரானவர்' என்ற பிம்பத்தை தகர்க்கலாம் என்று திட்டமிட்டிருக்கிறது. இது தொடர்பான போதிய தரவுகளையும், ஆதாரங்களையும் தி.மு.க. தரப்பு திரட்டி வருவதாகவும், விரைவில் இது தொடர்பாக வேலுமணி மீது தமிழக அரசின் நடவடிக்கை பாயலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் பா.ஜ.க., ஓபிஎஸ் மற்றும் எடப்பாடி என்று இரண்டு தரப்பினரையும் அரவணைத்து செல்வது போல சென்று, அவர்களின் அரசியல் செல்வாக்கை தங்களுக்கு 'மடை மாற்றுவது' தான் திட்டம் என்பது தெளிவாகின்றது.

இந்நிலையில் இலவசம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்த கருத்து அது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதியரசர் தெரிவித்த கருத்து, தற்போது அரசியல் களத்தில் பேசுபொருளாக மாற்றம் பெற்றிருக்கிறது.

இருப்பினும் தமிழக முதல்வர் ஸ்டாலின் 'புதுமைப்பெண்' எனும் திட்டத்தை, புதுடில்லியின் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையில் தொடங்கியிருக்கிறார். இந்தத் திட்டத்தின் மூலம் கல்லூரியில் உயர்கல்வி கற்கும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

சமூக நீதிக்கு கல்வி தான் அடிப்படை ஆதாரம் என்பதால், பெண்கள் உயர் கல்வி கற்க வேண்டும் என்பதில் திராவிட முறைமையைப் பின்பற்றும் அரசு உறுதியாக இருக்கிறது. 'படித்தால் தன்னம்பிக்கை வளரும். ஆனால் படிப்பதற்கே நம்பிக்கை கொடுப்பது திராவிடமும், அதன் வழி வந்த திராவிட முறைமை அரசு' என்பதால், ஸ்டாலினின் புதுமைப்பெண் திட்டத்திற்கு பெண்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்திருக்கிறது.

பா.ஜ.கவிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பணியாற்றுவதில் காங்கிரஸ் கட்சி தடையாகவும், இடையூறாகவும் இருப்பதாக பல மாநில கட்சிகள் கருதுகின்றன. மேலும் இவை அனைத்தும் தங்களுடைய மாநிலத்தில், காங்கிரஸை எதிர்த்து அரசியல் செய்து வருவதால், பாராளுமன்றத் தேர்தலுக்கு காங்கிரஸை கூட்டணியில் சேர்த்துக் கொள்வதற்கு உறுதியாக மறுப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் கூட்டணியை உருவாக்க பீஹார் முதல்வர் நிதிஷ் குமார் மேற்கொண்டு வரும் முயற்சிக்கு ஆதரவளிக்கும் வகையில், தி.மு.க. தலைவரான ஸ்டாலினின் அணுகுமுறையில் மாற்றம் பெற்றிருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். இது தொடர்பாக தி.மு.கவின் மூத்த நிர்வாகிகள் பேசுகையில், 'டில்லி, பஞ்சாப், மற்றும் கோவாவில் மாநில கட்சியாக அங்கீகாரம் பெற்றிருக்கும் ஆம் ஆத்மி, விரைவில் நடைபெற இருக்கும்

குஜராத் மாநில சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட்டு, குறிப்பிட்ட வாக்கு சதவீதத்தை பெற்றால், அக்கட்சிக்கு தேசிய கட்சி என்று அந்தஸ்து கிடைத்துவிடும். அந்த வகையில் தி.மு.க வின் பார்வை தொலைநோக்குடன் இருப்பதாகவும், அரவிந்த் கெஜ்ரிவாலின் அரசு மேற்கொண்ட நலத்திட்டங்களை தமிழகத்திலும் அறிமுகப்படுத்துவது, மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகளில் ஒரு பகுதி தான்'' என்றும் கூறப்படுகின்றது.

இதேநேரம் தமிழக ஆளுநர் செல்லுமிடங்களிலெல்லாம் சனாதன தர்மம், புதிய கல்விக்கொள்கை, திருக்குறள் என்று தமிழர்களின் மொழி சார்ந்த உணர்வு, கலாச்சாரம் சார்ந்த உணர்வு ஆகியவற்றைக் குறித்து எதிர்மறையான கருத்துகளை தொடர்ச்சியாக முன் வைத்து வருகிறார். இதன் மூலம் ஏதேனும் தாக்கங்கள் தமிழகத்தில் ஏற்படும் என்றும் எதிர்பார்க்கிறார். இதற்கு அவருடைய பாணியிலேயே அமைச்சர்களும், ஏனைய திராவிட சிந்தனையாளர்களும் பதிலடி அளித்து வருகிறார்கள்.

மறுபுறம், அந்த வகையில் தி.மு.க. மீது குற்றம் சாட்டினாலும், பா.ஜ.க. அதனையொரு பொருட்டாக கருதாது, சட்டப்படியாகவும், மக்கள் நலன்களுக்கு ஏற்ற வகையிலும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

பா.ஜ.கவின் அரசியல், தமிழகத்தில் எள்ளளவும் பாதிப்பை ஏற்படுத்தாது என்பதனை தன்னுடைய சாதுரியமான நடவடிக்கைகளால் முதல்வர் மு க ஸ்டாலினும் உறுதிப்படுத்தி வருகிறார். மேலும் தென்மாநிலங்களுக்கான கவுன்சில் கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சரான அமித் ஷாவின் முன்னிலையில், மாநில சுயாட்சி குறித்தும், மாநில உரிமைகள் குறித்து ஸ்டாலின் பேசியது கடும் ஆத்திரத்தை அளித்திருக்கிறது. இருப்பினும், சரியான தருணத்திற்காக பா.ஜ.க. காத்திருக்கிறது.

**கட்டுரையாளர்:**
**தமிழகத்தில் இருந்து**
**- குடந்தையான் -**

# தமிழ்அரசியல் கைதிகள் ஒரு தொடர் கதை!

(17ம் பக்கத் தொடர்ச்சி) இன்று இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கும் பகை மறப்பிற்கும் நல்லிணக்கத்துக்கும் தென்னாபிரிக்க முன்னுதாரணங்களை ஜனாதிபதியும் அரசாங்கத்தின் பிற தலைவர்களும் அடிக்கடி வலியுறுத்துகிறார்கள். ஆனால், தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவின் விடுதலையே அங்கே அமைதிக்கான பகை மறப்பிற்கான நல்லிணக்கத்துக்கான வாசல்களைத் திறந்து விட்டது. மண்டேலாவைத் தடுத்து வைத்திருந்த சிறைக்கதவுகள் திறக்கப்பட்ட போது, தென்னாபிரிக்காவின் சமாதானக் கதவுகளும் திறந்தன.

ஆகவே அமைதிக்கான தொடக்கப் புள்ளியாக சிறைப்படுத்தப்பட்ட அரசியல் விடுதலையாளர்களின் விடுதலை இருந்தது என்பதைச் சுலபமாக மறந்து விடுகிறார்கள். இதைப் புரிந்து கொள்ளாமல் அமைதியைப் பற்றிப் பேச முடியாது. தீர்வைப்பற்றிச் சிந்திக்க முடியாது.


எனவே சிறைப்படுத்தப்பட்டிருக்கும் விடுதலையாளர்களின் விடுதலையே இலங்கையின் அமைதித் தீர்வுக்கான வாசலைத் திறக்கும் எனப் புரிந்து கொண்டு இவர்களுடைய விடுதலையைச் சாத்தியப்படுத்த வேண்டும். இதன் மூலம் பாதிக்கப்பட்டிருக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கான ஆறுதலை வழங்கி, பகை மறப்புக்கும் புரிந்துணர்வுக்குமான ஏதுநிலைகளை உருவாக்க வேண்டும்.

இனியும் காலத்தை இழுத்தடித்து, முரண்நிலைகளையும் பகை வளர்ப்பையும் செய்து, நாட்டின் எதிர்காலத்தைப் பாழடிக்க முடியாது.

# திருகோணமலை ஆலய விவகாரத்தில் பின் கதவு ஆக்கிரமிப்பு முயற்சியும் தலைமையற்ற தமிழ் மக்களும்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -





இது இந்தக் கட்டுரையாளரின் வழக்கமான அரசியல் பத்திகளிலிருந்து சற்று மாறுபட்டது ஆனால் இது அரசியலுக்கு அப்பாற்பட்டதல்ல. சில தினங்களுக்கு முன்னர் இந்த விடயங்கள் இந்தக் கட்டுரையாளரின் நேரடி கவனத்திற்கு வந்தது. தட்சன கைலாசம் என்று அழைக்கப்படும் திருகோணேஸ்வர ஆலயமானது, இலங்கையின் பழைமை வாய்ந்த இந்து தமிழ் அடையாளமாகும்.

திருக்கோணேஸ்வரம் என்பதிலிருந்து தான் திருகோணமலை என்னும் பெயரே உருவாகியது. அதாவது, சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் மலை என்பதன் பொருள் தான் திருகோணமலை.

திருக்கோணேஸ்வரம் இலங்கையின் ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றாகும். வடக்கில் நகுலேஸ்வரம். வடமேற்கில் கேதீஸ்வரம், வடகிழக்கில் திருக்கோணேஸ்வரம், மேற்கில் முன்னிஸ்வரம் மற்றும் தெற்கில், தொண்டேஸ்வரம். இதுவே பஞ்ச ஈஸ்வரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அடிப்படையில் வேறு பெயர்களில் இருந்தாலும் கூட இவை அனைத்தும் சிவலிங்க வழிபாட்டை அடையாளப்படுத்தும் ஆலயங்களாகும்.

இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்றாசிரியரான கலாநிதி போல் ஈ. பீரீஸ், 1917 இல், இந்த ஈஸ்வரங்கள் தொடர்பில் குறிப்பிடும் போது, விஜயன் இலங்கைத் தீவிற்கு வருவதற்கு முன்பதாகவே, இலங்கையில் பஞ்ச ஈஸ்வரங்களை அடிப்படையாகக் கொண்ட, நிர்வாக முறையொன்று இருந்திருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஏனெனில் இந்த ஈஸ்வரங்களை அனைத்துமே இலங்கையின் கரையோர பகுதிகளிலேயே அமைந்திருக்கின்றது. இதன் மூலம், இலங்கை முழுவதையும் ஒரு அலகாக ஒருங்கிணைக்கும் வகையிலேயே இவ் ஆலங்களின் அமைவிடம் இருக்கின்றது. இந்த ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு, இந்துக்களின் நிர்வாக முறைமையொன்று பலமாக இருந்திருக்கின்றது. பின்னர் மேலைத்தேய படையெடுப்புக்களினால் தான் இந்த நிர்வாக முறைமை சிதைவடைந்தது. இது வரலாறு. இப்போது இன்றைய பிரச்சினையை நோக்குவோம்.

திருகோணமலை இந்துக்களினதும், இலங்கையின் இந்துக்களினதும் அடையாளமாக இருக்கின்ற, திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்தையும் உள்ளடக்கியவாறு, சிறிலங்காவின் தொல்பொருள் திணைக்களம் உல்லாச அபிவிருத்தி என்னும் பெயரில் திட்டமொன்றை முன்னெடுக்க முயற்சிக்கின்றது. இது தொடர்பில் ஆலய நிர்வாக சபையின் அனுமதி பெறப்படவில்லை. திருக்கோணேஸ்வர ஆலயத்திற்கான காணியின் அளவு 18 ஏக்கர்களாகும். இந்த எல்லைக்கு வெளியில் தொல்பொருள் திணைக்களம் விடயங்களை முன்னெடுப்பதற்கு நிர்வாக சபை ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. ஆனால் ஆலய எல்லைக்குள் உல்லாசத் துறை அபிவிருத்தி என்னும் பெயரில் ஆலயத்தின் புனிதத்தை கேள்விக்குள்ளாக்குவதுடன், நீண்டகால நோக்கில், ஆலயத்தின் முழு நிர்வாகத்தையும் தொல்பொருள் மற்றும் உல்லாச அபிவிருத்தி அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான ஒரு சூழ்ச்சி திரை மறைவில் நடக்கின்றதாக என்னும் சந்தேகம் ஆலய நிர்வாக சபையினர் மத்தியிலுண்டு. எனது பார்வையில் அவர்களது சந்தேகம் மிகவும் நியாயமானது. ஒரு வேளை இவ்வாறு நாம் சந்தேகப்படாமல் இருந்தால் தான் அது தவறானது. ஏனெனில், நமது சந்தேகத்திற்கு வலுவான காரணங்கள் உண்டு.

கோட்டபாய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவானதை தொடர்ந்து, சிங்கள பௌத்த வேலைத் திட்டமொன்றை பகிரங்கமாகவே முன்னெடுத்திருந்தார். இந்த பின்புலத்தில், கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்பொருள் முக்கியத்தும் வாய்ந்த இடங்களை ஆராய்வதற்கென 11 அங்கத்தவர்களை கொண்ட, **(Presidential Task Force for Archaeological Heritage Manage ment in the Eastern Province)** தொல்பொருள் பாதுகாப்பு செயலணியொன்றை நியமித்திருந்தார். ஏன் கிழக்கு மாகாணத்திற்கு மட்டும் இவ்வாறானதொரு செயலணி இந்தக் கேள்வியை அப்போது பலரும் எழுப்பியிருந்தனர். கோட்டபாயவின் தொல்பொருள் பாதுகாப்பு செயலணிக்கு நியமிக்கப்பட்டவர்களில் முக்கியமானவர், எல்லாவல மேதானந்த தேரர். சிங்கள பௌத்த தொல்பொருளியல் பற்றி பேசி வரும் எல்லாவல, திருக்கோணேஸ்வர ஆலயம் தற்போது அமைந்துள்ள இடத்தில், முன்னர் ஒரு பௌத்த கோவில் இருந்ததாகவும். அதனை இடித்து விட்டே, கோணேசர் ஆலயத்தை நிறுவியதாகவும் பகிரங்கமாக கூறியவர்.

இந்த செயலணியின் பிறிதொரு உறுப்பினரான அரிசமலை விகாரையின் தலைமை பிக்குவான பானமறு திலவன்சா தேரர், கன்னியா சிவன் கோவிலை ஆக்கிரமிக்கும் முயற்சியை ஊக்குவித்தவர். இவ்வாறான பின்புலம் கொண்டவர்களை உள்ளடக்கிய கோட்டாவின் செயலணியின் நோக்கம் என்ன என்பதை ஊகிப்பது கடினமல்ல. கோட்டபாய ராஜபக்ச அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்பட்டதை தொடர்ந்து கோட்டபாயவினால் முன்னெடுக்கப்பட்ட சிங்கள-பௌத்த ஆக்கிரமிப்பு திட்டங்களும் செயலிழந்தன. ஆனால் கோட்டபாயவினால் நியமிக்கப்பட்ட ஆளுனர் தான் இப்போதும் கிழக்கு மாகாண ஆளுனராக இருக்கின்றார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஒரு நாட்டின் தொல்பொருள் திணைக்களத்தின் பிரதான பணியென்பது, அந்த நாட்டின் தொல்பொருள் அடையாளங்களை பேணிப் பாதுகாப்பதாகும் ஆனால் சிறிலங்காவின் தொல்பொருள் திணைக்களத்தின் பிரதான பணியோ வேறு. அதாவது, தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் சிங்கள-பௌத்த அடையாளத்திற்குள் கொண்டு வருவதை மட்டுமே சிறிலங்காவின் தொல்பொருள் திணைக்களம் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது.


எங்களுக்குள்ள அனுபவத்தின் அடிப்படையில் நோக்கினால், தொல்பொருள் திணைக்களம் ஒரு ஆலய விடயத்திற்குள் தலையிடுகின்ற என்றால், நிச்சயம் அங்கு ஒரு இரகசிய வேலைத்திட்டமிருக்கும். இந்த பின்புலத்தில் நோக்கினால், திருகோணேஸ்வர ஆலயத்தை உள்ளடக்கியவாறு, உல்லாசத்துறை அபிவிருத்தியென்னும் பெயரில் தொல்பொருள் திணைக்களம் நுழைவதானது, நீண்டகால அடிப்படையில் கோணேசர் ஆலயத்தை விழுங்கும் ஒரு செயற்பாடுதான். ஏனெனில் உல்லாசத் துறை அபிவிருத்தியை செய்வதற்கு பல்வேறு இடங்கள் இருக்கின்ற போது, குறிப்பாக கோணேசர் ஆலயப்பகுதியை தெரிவு செய்ய வேண்டிய அவசியமென்ன?

இங்கு பிறிதொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது, பொதுவாக ஆக்கிரமிப்புக்களை திட்டமிடுவதற்கு முன்னர், ஆக்கிரமிப்பிற்கு சாதகமான ஒரு சனக் கூட்டத்தை தயார் செய்து கொள்ள வேண்டியது அவசியமான ஒன்றாகும். ஏற்கனவே ஆலய எல்லைக்குள் வியாபார நிலையங்களை நடத்தி வரும் சிங்கள வியாபாரிகள் குழுவொன்று தொல்பொருள் திணைக்களத்தின் நிகழ்சி நிரலுக்கு சாதகமாக இருக்கின்றது. இவர்களை ஆலயத்தின் காணிக்கு வெளியில் செல்லுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும் கூட, இதுவரையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில், இது தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் விடயங்களை முன்னெடுக்குமாறே ஆலய நிர்வாக சபை கேட்கின்றது.


ஆனால் ஆளுனர் புதிதாக விடயங்களை அணுகப் போவதாக கூறி வருகின்றார். இதன் மூலம் திருகோணேஸ்வரர் ஆலய விடயத்தில் ஆளுனர் பிரத்தியேக ஈடுபாட்டை காண்பிக்கின்றார் என்பது வெள்ளிடைமலை. ஏனெனில் இது தொடர்பில் (22ம் பக்கம் பார்க்க)



# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?



மேடராசி அன்பர்களே! சுப நிகழ்ச்சிகளில் இருந்து வந்த தடை நீங்கும். மனசோர்வு அகலும். மன அமைதி பாதிக்கும் படியான சூழ்நிலை ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் அதிக லாபம் பெறுவர். அலுவலக வேலைகளால் அலைச்சல் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்களால் வீண் டென்ஷன் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி செயல்படுவது நன்மை தரும்.



ரிஸபராசி அன்பர்களே! மனத் துணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். உறவினர்களுடன் பேசும் போது நிதானத்தை கடைப் பிடிப்பது நல்லது. புரட்டாதி சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு தீபம் ஏற்றி வழிபடவும்.




மிதுனராசி அன்பர்களே! முன்பு தடைபட்ட காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி நடந்து முடியும். வெளியூர் பயணங்கள் உண்டாகும், அதனால் நன்மையும் ஏற்படும். வழக்குகளில் இருந்து வந்த சோதனைகள் மாறும். சொத்து சம்பந்தமான விஷயங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். நண்பர்கள் பல விதங்களிலும் ஆதரவாக இருப்பர். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் குறையும். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.



கடகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும்.தொழில் வியாபாரத்தில் கூடுதல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவி பிரச்னைகளை நிதானமாக பேசுவது நல்லது.



சிம்மராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காணப்பர்.



கன்னிராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காணப்பர். நிலுவையில் உள்ள தொகை வந்து சேரும். கணவன், மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.




துலாம்ராசி அன்பர்களே! நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஏற்படும் பணதேவையை சரிகட்ட நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான வேலைகளில் அலைச்சல் இருக்கும். மேலிடத்திலிருந்து கனிவான உபசரிப்பு கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே பழைய விஷயங்களை பேசாமல் இருப்பதன் மூலம் ஒற்றுமை இருக்கும்.




விருச்சிகராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். மனமகிழ்ச்சிக்காக பணம் செலவு செய்ய தயங்க மாட்டீர்கள். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். வாக்கு வன்மை அதிகரிக்கும். வியாபாரம் தொடர்பான வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.







தனுசுராசி அன்பர்களே! எந்த ஒரு காரியம் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பீர்கள். வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்வேகம் பிறக்கும். தொழில் தொடர்பான விவகாரங்களில் இருந்து வந்த வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் மூலம் அனுகூலம் ஏற்படும். புதிய வேலையில் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு வரும்.



மகரராசி அன்பர்களே! எடுத்த காரியம் கைகூடும். கடன் விவகாரங்களில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். வழக்குகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கலாம். மேலதிகாரிகளால் உத்யோகஸ்தர்களுக்கு நன்மை உண்டாகும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். வாழ்க்கை துணை மூலம் ஆதாயம் கிடைக்கும்.



கும்பராசி அன்பர்களே! எதிர்பாராத சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்ப்புகள் நீங்கும். கவலையை விட்டு விட்டு தொழில் வியாபாரத்தில் கவனம் செலுத்துவது நல்லது. உத்யோகஸ்தர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம். சக ஊழியர்களிடம் பேசும் போது கோபபடாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும்.



மீனராசி அன்பர்களே! வரவை போலவே செலவும் இருக்கும். பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும். எனவே கவனமாக இருப்பது நல்லது. திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பர். வியாபாரம் தொடர்பான முயற்சி வீண் முயற்சியாக இருந்தாலும் பின்னாளில் அதற்கான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலை சுமை இருக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# திருகோணமலை ஆலய விவகாரத்தில்...

(21ம் பக்கத் தொடர்ச்சி) ஆலய நிர்வாகம் மற்றும் சிவில் சமூக குழுக்களுடனான சந்திப்பின் போது, விடயங்களை புதிதாக முன்னெடுப்பது பற்றியே ஆளுனர் வாதிட்டிருக்கின்றார். இந்த விடயம் தொடர்பில், அவர்களால் முடிந்த அனைத்தையும் ஆலய நிர்வாக சபை முன்னெடுத்திருக்கின்றது. ஆனால் இங்குள்ள பிரதான பிரச்சினை. இந்த விடயத்தில் அரசியல் ரீதியாக தலையீடு செய்வதற்கும், இதனை எதிர்ப்பதற்கும் திருகோணமலை தமிழ் மக்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இல்லை. சம்பந்தன் என்னும் பெயரில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இருந்தாலும் கூட, இதனை கவனிக்கக் கூடிய நிலையில் அவர் இல்லை. திருகோணமலை தமிழரசு கட்சி நிர்வாகம் சம்பந்தன் விடயத்தில் ஒரு இறுதி முடிவையெடுக்க வேண்டும். மக்களா? சம்பந்தனா? யார் முக்கியம் என்பதை தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் ஏனைய தமிழ் மாவட்ட தமிழ் மக்கனைவருக்கும் மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்றனர் ஆனால் திருகோணமலை தமிழ் மக்கள் மட்டும் பிரதிநிதியிருந்தும் அரசியல் அனாதைகளாக இருக்கின்றனர்.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்களின் பிரதிநிதியான சம்பந்தன், கடந்த இரண்டு வருடங்களாக திருகோணமலைக்கு செல்லவில்லை. சம்பந்தன் இப்போது நாடாளுமன்றத்திற்கும் செல்வதில்லை. தமிழ் மக்களின் பிரதிநிதியின் பங்கு பற்றல் இல்லாமலேயே திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அனைத்து முடிவுகளும் எடுக்கப்படுகின்றன. மாகாண சபையும் இல்லாத நிலையில், சிங்கள தரப்புக்கள் தமிழ் மக்களின் இயலாமையை, தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் தான், கோணேஸ்வரர் ஆலய விவகாரத்தில், எவ்வித இடையூறுகளுமின்றி, தொல்பொருள் திணைக்களத்தால் செயற்பட முடிகின்றது. தங்களை, ஆலய நிர்வாக சபையினால் தடுக்க முடியாதென்னும் நிலைப்பாட்டிலிருந்து தான் தொல்பொருள் திணைக்களம் எதேச்சாதிகாரமாக இந்த விடயங்களை முன்னெடுக்கின்றது.

இதுவரையில் ஆலய நிர்வாக சபைக்கு, தொல்பொருள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் எந்தவொரு அறிவித்தலும் வழங்கப்படவில்லை. அதே வேளை, அவர்களது ஆலோசனைகளையும் கோரவில்லை. 1971 மற்றும் 1981 வர்த்தகமானியின்படி, தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் தாங்கள் எதனையும் செய்ய முடியுமென்னும் அதிகாரத்திலிருந்தே தொல்பொருள் திணைக்கள அதிகாரி பேசியிருக்கின்றார். ஆனால் குறித்த வர்த்தமானி அறிவித்தலானது, நாடு யுத்தத்திற்குள் சிக்கியிருந்த போது வெளியிடப்பட்டவை. இது யுத்ததிற்கு பின்னரான பொறுப்புக் கூறல் தொடர்பில் பேசப்படும் காலம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் உடனடி கவனம் செலுத்த வேண்டும். இந்த விடயத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நேரடி கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். நாடு மோசமானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்ற, இவ்வாறானதொரு காலத்தில் கூட, தமிழ் மக்களின் வரலாற்று பெருமைமிக்க ஆலயமாகவும், இந்துக்களின் அடையாளமாகவும் இருக்கின்ற திருக்கோணேஸ்வர ஆலயத்தின் புனிதத்தன்மையை கேலிக்குள்ளாக்கும், இவ்வாறானதொரு திட்டத்தை தொல்பொருள் திணைக்களமும் ஆளுனரும் முன்னெக்க முற்படுவதை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட வேண்டும். சர்வதேச அழுத்தங்கள் எதனையும் நாம் கண்டு கொள்ளப் போவதில்லை என்னும் துனிவிலுருந்து தான் இவ்வாறான முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

# திருக்கோணேஸ்வரத்தை டக்ளஸ் காப்பாற்றுவாரா?

(5ம் பக்கத் தொடர்ச்சி)திருக்கோணேச்சரத்தைப் பாடியுள்ள னர். முழுக்க முழுக்கச் சைவர்கள் வழிபட்டுச் சைவர் கள் திருப்பணி செய்து சைவர்களே பராமரித்த திருக்கோயிலே திருகோணேச்சரம். பூமிப் பந்தில் வாழ்கின்ற 120கோடி இந்துக்களுக்கு உரித்தான கோயில் திருக் கோணேச்சரம்.

சாத்தான் கோயில் என்று கூறித் திருகோணச்சரத்தை வரலாற்றில் முதல் முறையாக இடித்தவர்கள் தரைமட்ட மாக்கியவர்கள் அக்கோயிலின் கருங்கற்களைக் கொண்டு கோட்டை கட்டியவர்கள் அரக்கராகிய கத்தோலிக்கர். இந்த வரலாற்றுப் பின்னணியில் திருக்கோணேச்சரத்தைக் காப்பாற்றுகின்ற பெரும் முயற்சியில் அமைச்சர் தேவானந்தா ஈடுபட்டுள்ளார். தேவானந்தாவால் முடியும். மேதைகே. சி. நித்யானந்தா வழி வழிச் சைவஅடியவர் அல்லவா? தேவானந்தா வழிகளைக் கண்டு பிடித்துக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை, சிவசேனைத் தொண்டர்களுக்கு உண்டு அவரின் திறமை ஆற்றல் செயல் வேகம் யாவிலும் நம்பிக்கை சிவசேனையில் உள்ளவர்களுக்கு உண்டு என்றுள்ளது.

# ஐ.நா.மனித உரிமைகள் பூச்சிய வரைவு தீர்மானம்!

(3ம் பக்கத் தொடர்ச்சி) கண்காணிப்பு -அச்சுறுத்தல் மற்றும் ஊடகவியலாளர்கள், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் இறந்தவர்களை நினைவு கூருவதற்கான தடை மற்றும் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை துன்புறுத்துதல்கள் போன்றவை குறித்துவரைவு தீர்மானம் ஆழமான கவலைகளை வெளியிட்டுள்ளது.


தவிர, பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை இரத்து செய்வதற்கும், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான இலங்கையின் கூற்றுக்களை இந்தத் தீர்மானம் கவனத்தில கொள்கிறது. எனினும், பல ஆண்டுகளாக சர்வதேச சட்டத்துக்கு அமைவாக சட்டம் திருத்தப்படும் என்று இலங்கை சர்வதேச சமூகத்துக்கு பல உறுதிமொழிகளை அளித்துள்ளது.

இன்றுவரை, போதுமான சீர்திருத்தங்கள் செய்யப்படவில்லை என்பதையும் தீர்மானம் சுட்டிக்காட்டுகிறது. தனிநபர்களை தன்னிச்சையாக கைது செய்வதற்கும் தடுத்து வைப்பதற்கும், கைதிகள் சித்திரவதை - பாலியல்வன்புணர்வு மற்றும் பிற மோசமான சிகிச்சைக்கு உள்ளாக்குவதற்கும் ஒரு கருவியாக இலங்கை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பயன்படுத்துகிறது என்று தீர்மானம் கூறுகிறது.

சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்படிக்கையை இலங்கை எட்டியுள்ளது என்ற அறிவிப்பை தீர்மானம் வரவேற்றுள்ளது. அத்துடன், நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தினசரி ஊதியம் பெறுபவர்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் ஊனமுற்ற நபர்கள் உட்பட மிகவும் பின்தங்கிய தனிநபர்களின் உரிமைகளை மேம்படுத்தி பாதுகாக்க வேண்டும்என்று வரைவில் சொல்லப்பட்டுள்ளது.

அத்துடன், வரைவு தீர்மானத்தின் இறுதிப் பத்தி இலங்கையில் மனித உரிமைகள் குறித்த கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலை தொடருமாறு ஐ. நா.மனித உரிமைகள் பேரவையை உறுப்பு நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

# 10வது ஆண்டு நினைவஞ்சலி




அன்பின் திருவுருவே! பாசத்தின் உறைவிடமே!
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வெண்நிலவே!
ஏணியாக நின்று எம்மை ஏற்றி விட்டவரே!
கலங்கரை விளக்காக நின்று துறைமுகம் காட்டியவரே!
வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டிய அம்பா
இன்னும் சில நாள் எங்களுடன் வாழ மறந்ததேனோ?

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த எங்கள்
ஒளிவிளக்கு அணைந்து ஆண்டுகள் பத்து கடந்தாலும்
என்றும் எங்கள் மனம் அப்பாவை
தேடி நிற்கின்றது! துவண்டு நிற்கின்றோம்!

உங்கள் ஆத்மா எங்களை வழி நடத்தும் என்ற
நம்பிக்கையில் தடம் பதிக்கின்றோம்!

அன்பு அப்பாவிற்கு எங்கள் கண்ணீர் துளிகளால்
பாதம் தொட்டு கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் குடும்பத்தினர்

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.


*At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*


Vilosanan Sivatharman
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை


Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

*Pre-Arranging: A Wise Choice...*

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு வாங்க.. விற்க..

**Ravi. Paramu**
Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



**RANJANI THIRUKESWARAN LAW OFFICE**

- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242



Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)

இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய அழையுங்கள்
416 841 9600



OVER 10 YEARS EXPERIENCE
**RAVI VEERASINGAM** B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST

HOMELIFE

**ARVIN-KING**
RABINTHIRARAJ
Broker
416-200-7001



TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*



RENOWNED FOR
**AUTHENTIC KANCHIPURAM**
SILK SAREES


$599*
FLAT RATE

Aalayaa

2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

**அபாயம் உண்மையாகலாம்.**

சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.



புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?

| In Canada | |
|---|---|
| Breast Cancer | 1 woman in 8 |
| Prostate Cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |

Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival Rate | |
|---|---|
| Cancer | 60% |
| Heart Attack | 85% |
| Stroke | 1 person in 4 |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.

- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years

**BENEFITS PAID BY GENDER** Women 54% Men 46%

Industry critical illness claim breakdown




iA Financial Group

**AJITH SABARATNAM**
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.

